REGD. M. 4642

# திராவிடநாடு

விலை அணு 2  ஆண்டுசந்தா ரூ 7  இலங்கை 15 சதம்  மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 10—10—48 | இதழ் 17

## சம்மதமா?

[கம்பதாசன்]

—✲—

நதியெல்லாம் கடலினிலே சேர்தல் போல
நற்றமிழர் நாடதுவே இந்தியத் தானில்
துதிபாடிச் சேர்ந்துவிட வேண்டு மென்று
சொல்கின்றார் கிள்ளையென அறிஞர்க் கூட்டம்!
கொதிக்கின்ற வெயிலிலே வேட்கை தீரக்
குடிக்கின்ற காவிரிதான் கடலிற் சேர்ந்தால்
மதிகெட்டோர் காவிரியைக் கடலிற் றேடி
மாய்வதலால் பயனேதும் வாய்ப்ப துண்டோ?

கடற்சேர்ந்த காவிரிதான் என்றே வோர்நாள்
கருமுகிலாய் மழைபொழிந்து காவிரி யாகும்!
இடமோடு வேட்கைதனைப் பொறுத்துக் கொண்டு
இன்றசோறு நெஞ்சடைக்க இருப்பாய் என்றால்
படர்வானம் தனைநோக்கி 'பரமா!' என்று
பார்த்திருக்கச் சம்மதமா? பகுத்தா ராய்ந்து
உடனேநீ முடிவிற்கு வந்து விட்டால்
உருப்படுவாய் தமிழ்மானம் இறப்படும் தோழா!

# ★ திருவாளரே! திருவாளரே!! ★

ஸ்ரீஜத்கள்

M. சுப்பராய ஐயர்
C. R. சீனுவாசாச்சாரியார்
காசா. சுப்பாராவ்
C. P. இராமசாமி ஐயர்
A. C. கோபாலசாமி ஐயங்கார்

ஆகிய பிரமுகர்கள், சென்ற திங்கள் இறுதியில், மயிலாப்பூரில் கூடினர் —கபாலீச்வரர் கோயில் தரிசனத்துக்கா — கர்மயோக விளக்கம் கூறவா—அல்லது, ஏதேனும் யாக யோகாதி காரியம் பற்றிய ஆலோசனைக்கா? அல்ல—அல்ல. இருபது ஆண்டுகளுக்கு முன்பு, அப்படிப்பட்ட காரியங்களுக்காகவே இப்படிப்பட்ட பிரமுகர்கள் கூடியிருப்பர்—அப்போதெல்லாம், அப்படிப்பட்ட காரியங்களுக்கு அவசியமும் அலாதியான மதிப்பும் இருந்தது. இப்போது காலம் மாறியல்லவா விட்டது—அதனைத் "திருவாளர்கள்" உணர்ந்துகொள்ளாவிட்டாலும், "ஸ்ரீஜத்கள்" தெரிந்துகொண்டிருக்கிறார்கள் - அதற்கேற்பவும் நடக்க முற்படுகிறார்கள்.

மயிலையில் கூடிய இந்தப் பிரம்ம குலமணிகள், பண்டைய முறைகளைப் பற்றிப் பேச அல்ல, புதிய, நவீன, விஞ்ஞானக் கல்வியைப் பற்றிப் பேச—பேச மட்டுமல்ல—அந்தக் கல்வியை அடிப்படையாகக் கொண்ட கல்லூரி அமைக்க—வெறும் திட்டம் தீட்டிவிட்டுக் கலைய அல்ல—குரோம்பேட்டைக் கருகே இதற்காக 30 ஏகர் நிலம் வாங்கிவைத்துவிட்டு, மேலால் என்ன செய்வதென்று தீர்மானிக்கக் கூடினர்.

விஞ்ஞானத்தின் மேம்பாட்டினையும் இன்றியமையாத் தன்மையையும், வியாசர் வசிஷ்டர் சுலோகங்கள், சூத்திரங்களைமட்டுமே அறிந்து மதிப்பவர்கள், என்று மக்கள், எந்தக் குலத்தவரைப் பற்றி எண்ணிக்கொண்டுள்ளனரோ, அந்தக் குலமணிகள் உணர்ந்து, அதற்கான கல்லூரி அமைக்கத் திட்டமிடுகின்றனர். ஆரம்பச் செலவாக ஐந்து இலட்சம் ரூபாய் சேர்ப்பதென்றும், கல்லூரியைத் துவக்கிவிட்டால், பிறகு சர்க்காரின் உதவி தானாகக் கிடைக்குமென்றும், பேசினர்—முடிவு செய்தனர். இந்தக் கல்லூரியில் விஞ்ஞான ரீதியாகத் தொழில்களை அமைத்து நடத்தும் முறைகள் கற்றுக்கொடுக்கப் டுமாம் — மூன்று அல்லது 5 ஆண்டுக் கல்வித்திட்டம் வகுக்கப்படுமாம் இந்தப் புது முயற்சியில், அவர்கள் இறங்குகிறார்கள்.

காலவேகம், எவ்வளவு அருமையான கருத்து மாற்றத்தை உண்டாக்கியிருக்கிறது! களிப்படைய வேண்டாமா இதைக் கண்டு. காயத்ரியின் பெருமை பற்றிய விஷயங்களே முக்கியம் — முப்புரியினருக்குத் தேவையான ஞானம், என்ற காலம், எங்கேயோ காற்றோடு காற்றாகப் பறந்தே போய்விட்டது! கல்லூரி அமைக்கக் கூடுகிறார்கள். வேதபாடசாலை கட்ட அல்ல!!

இந்தத் தெளிவும், யூகித்தறியும் திறமும், "திருவாளர்களிடம்" உண்டோ?

சர். பி. டி. ராஜன் தலைமையிலே, சில வேளைகளிலே திருவாளர்கள் கூடுவதுபற்றிய "சேதிகள்" வருகின்றன அல்லவா — பாருங்கள், இப்படி ஒரு, தேவையான, பயனுள்ள, காலத்தை அறிந்து பணிபுரியும் முயற்சி இருக்கிறதா என்று? இருக்காது!

வடபழனியாண்டவர் குளத்துக்குப் படிகள் புதுப்பிக்கவோ தென்காசிக் கோயிலுக்குக்கோடி தீபார்ச்சனைக்கு ஏற்பாடு செய்யவோ, கூடுவரேயன்றி, மைலையில் கூடினரே, சர். சி. பி. உட்பட, பலர், அது போன்ற காரியத்துக்காகக் கூடினரா? இல்லை!! கூடுவரா? சந்தேகம்!!

காலத்தின் போக்குக்கு ஏற்றபடி கருத்தைத் திருத்திக்கொள்வதுடன் வாழ்க்கை முறையையும், சமூக அமைப்பையும் கூடமாற்றி அமைக்க வேண்டும் என்ற அறிவும் எண்ணமும், 'திருவாளர்களிடம்' உண்டோ? சந்தேகம்!!

சர்.சி.பி. இராமசாமி ஐயர் வேலைகள் பார்க்கும்போது பார்த்தார்—ரசித்தார்—விலகியதும், பழைய நினைவுகளை எண்ணிக் கொண்டோ, பகற்கனவுகள் கண்டுகொண்டோ, தன்வாழ்வுக்குப் போதுமான செல்வம் இருக்கும்போது, சுகத்தை நாடுவோமே, என்றோ இருந்து விட்டாரா? சுழற்காற்றுப் போலாகிவிட்டார். அமெரிக்கா சென்று வந்தார்—இப்போது ஆஸ்திரேலியா போகப் போகிறார். ஆங்காங்கு கண்டவைகளையும் கேட்டவைகளையும், பயன்படுத்தும் வழிவகைகளை ஆராய்கிறார்.

மயிலாப்பூரில் கூடி அவர்கள் தீர்மானித்த கல்லூரி அமைந்து விட்டால், பல் வேறு நாடுகளிலே அவர் திரட்டிய அனுபவச் செல்வத்தை அளிக்கத்தான் போகிறார். அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் அவர் ஆகமத்தைப் பற்றியோ அத்வைதம் பற்றியோ கூடப் பேசுவார்—இங்கு, விஞ்ஞானத்தின் அவசியத்தையும், கல்வித் திட்டம் விஞ்ஞானமுறை கொண்டதாக வேண்டும் என்பது பற்றி, பேச்சல்ல, செயலிலேயே ஈடுபடுகிறார்.

'நம்ம சண்முகம்,' வேலை பார்த்து வீடு திரும்பியிருக்கிறார்—என்ன செய்கிறார்? வேறு வேலை கிடைக்கும் வரை, வீட்டிலிருக்கிறார்!! அவர், ஏதேனும் இப்படி ஒரு நற்காரியம் செய்யக்கூடாதோ? உலகம் சுற்றியவர், ஊராளும் முறைகள் பயின்றவர், நிதிமந்திரியாக இருந்தவர், இவ்வளவும், அவருக்குத்தந்துள்ள செல்வம் இருக்கிறதே—பாழாய்ப் போன பணத்தை அல்ல நான் குறிப்பிடுவது—அறிவுத் திறனைக்குறிப்பிடுகிறேன்—அதனை வாரி வழங்கக் கூடாதோ? செய்தால் சர்க்காரில் சேவகம் செய்வேன் இல்லையானால், சிலப்பு எடுப்பேன் என்பதுதானா போக்காக இருக்க வேண்டும்! திருவாளரே, திருவாளரே! திரும்பிப்பாருமய்யா, ஸ்ரீஜத்களை!! ஒரு பெரியவர், ஓயாது உழைக்கிறார், திருவாளர்களை உயர்த்த—ஸ்ரீஜத்களின் ஆதிக்கத்தை ஒழிக்க—சகலரையும் தோழராக்க—அவருடைய பாராட்டுதலையும் பெற்றுக்கொண்டு, திருவாளர்கள் இப்படி இருக்கிறார்கள்!! அவரோடு சேர்ந்து பணிபுரியக் கூட வரவேண்டாம்—அதற்குத் தேவையான சில குணங்கள் மாளிகைகளில் கிடைக்காது—அவர் கூறுகிறாரே, நாட்டில் மிகமிகக் கீழான நிலையில், நாலாம் ஜாதியாய், ஐந்தாம் ஜாதியாய் வைக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வு முற்போக்குள்ளதாக வேண்டும் என்று. அந்த ஒரு துறையிலே, செய்யக் கூடியதை, செய்வதற்கு வசதியும் திறனும் இருந்தும், செய்யாமலிருப்பது அழகா! சர். சி. பி. இருக்கும் திக்கு நோக்கிப்பார்த்துவிட்டுத் திருவாளர்கள் பதில் கூறட்டும்!

# நீங்களே கூறுங்கள்

என்றோ ஒருநாள் தேவையான இயந்திர சாதனம் கண்டுபிடிக்கப்படாத நிலையில், விஞ்ஞான ஒளி வேண்டிய அளவிற்கு விசாத காரணத்தால், நமது மக்கள் முக்கிய உணவுப் பொருளான நெல்லைக் கையினாலேயே குற்றி உமியை நீக்கி அரிசியாக ஆக்கவேண்டி இருந்தது. மிருகத்திலும் கேவலமாக உழைக்கவேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது. ஆனால் காலப்போக்கில் புரட்சிகரமான இயந்திர சாதனங்கள் ஏற்பட்டுவிட்ட காரணத்தால், பலர் சேர்ந்துகொண்டு கைகள் வலிக்கத், தோள்கள்சோர, வியர்வை ஆறாகப் பெருகப் பாடுபட்டாலும், பலன் அதிகம் கிடைக்காமல் திண்டாட வேண்டிய நிலைமாறி, நினைத்த மாத்திரத்தில் வண்டி வண்டியாக நெல் இருந்தாலும், சில நிமிஷத்தில் அதிக கஷ்டமில்லாமல், அரிசியாக மாற்றிவிடும் இயந்திரத்தை நாடினர். கையினால் நெல்குற்றுகிறவர்களுக்குத்தான் தெரியும், அதிலுள்ள சிரமமும், அத்தொழிலில் தாங்கள் பெறும் வருவாயின் குறைவும். இயந்திரத்தில் தீட்டின அரிசியில் ஜீவசத்துப் போய்விடுகிறது, கைக்குற்றல் அரிசியில் அவ்வாறு நேருவதில்லை, அதை உண்ணும் மக்கள்தான் ஆரோக்கியமாக அதிககாலம் வாழ்வார்கள் என்பனபோன்ற சுகாதாரப் பிரசாரம் செய்கிறவர்கள் கையில், உலக்கையையும் ஒரு மூட்டை நெல்லையும் கொடுத்துக் குற்றிக் கொடுங்கள் என்று கட்டளையும் பிறப்பித்தால், முன்னர் தாங்கள் ஆற்றிய சுகவழிப் பிரசாரத்திற்கு நேர் விரோதமாகப் பேசக்கிளம்பிவிடுவார்கள். இயந்திரத்தில் தீட்டும் அரிசியில் ஜீவசத்துப்போய் விடுவதாக இருந்தால், வேறு ஜீவசத்து நிரம்பியுள்ள பொருளை உட்கொள்ள உபதேசிப்பதும், அனைவரும் அப்பொருட்களை இலகுவாகப் பெறுவதற்கான வாழ்க்கைத் தரத்தைத் தோற்றுவிப்பதற்கான முயற்சியை மேற்கொள்வதுமே முறை. இந்தச் சிறந்த முறையை விட்டுவிட்டு, திண்ணையில் உட்கார்ந்துகொண்டு, பாடுபடுகிறவர்கள் பரிதாபத்தை அறியாது, துளியும் இரக்கமற்ற நெஞ்சினராய், அவசியமற்ற பேச்சைப் பேசிக்கொண்டும், காலத்தைப் பழித்துக்கொண்டும் இருப்பது கூடாது. மனிதனுடைய உழைப்பை, நேரத்தைக் குறைத்துச் சுகமளிக்கும் இயந்திர சாதனங்களைத்தான் மக்கள் நாடுவர். இயந்திரங்கள் ஏற்பட்டதும் அதற்காகத்தான். சிலரின் பணப்பெட்டியை பளுவாக்குவதற்காக அல்லவே அல்ல.

தக்ளியிலும் இராட்டையிலும் மக்களில் சிலருக்கும் என்றென்றும் ஊக்கம் குன்றாமல் இருப்பதுபோலக் காணப்படலாம். வேறுசிலர் இதுபற்றி, நாட்டுமக்களின் செல்வநிலையை உயர்த்துவதற்கு இதனைக் காட்டிலும் வேறு பொருளியல் முறை கிடையாது என்று மேல்நாட்டினருக்கும் விளக்கம் கூறலாம். இராட்டையைச் சுழற்றினால், அவ்வாறு சுழற்றுகிறவர்களுக்குத் தூய சிந்தனை, உயர்ந்த ஒழுக்கம், அன்பில் இச்சை, அறத்தில நாட்டம், தன்னடக்கம், முதலிய அருங்குணங்கள் அமைகிறது என்று கந்தபுராணத்திலும் இல்லாத அளவிற்குப் புளுகலாம். ஆளவந்தார்களும், வரிப்பணத்தை, தக்ளியும் இராட்டையும் செழித்தோங்க வாரி இறைக்கலாம்.


ஆதாரக்கல்வி என்னும் பெயரால், பள்ளியில் பயிலும் சிறார்களை வாரத்தில் சிலமணிநேரமாவது, தக்ளியில் நூல் நூற்கக் கட்டாயப்படுத்தலாம். தக்ளியின் 'புதுமை' யைக் கண்டு ஆரம்பத்தில் அச்சிறுவர்கள் நூல்நூற்பதில் ஆர்வம் குன்றாமல் இருக்கலாம். இந்தப்பெரிய வித்தையைப் பயிற்றுவிக்கும் பண்பு படைத்த ஆசிரியரும், இதுகுறித்து அவர் நெஞ்சில் எத்தகைய நேர்மையான நினைப்புத் தோன்றினாலும், அதனை வெளிக்குக்காட்ட அஞ்சி, போதிக்கும் வேதனையை புறக்கணித்து நடக்கமுடியாத நிலையில், காலத்தை நொந்துகொண்டு மௌனியாகக் காலங் கழிக்கலாம்.

கட்டாய இந்திநுழைப்புப்பற்றித் தங்கள் கருத்துக்களை வெளியிடும் தமிழ் ஆசிரியர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போவதாக ஆளவந்தார்கள் அறிவித்துவிட்ட பிறகு, அலுவல் பார்க்கும் ஆசிரியர்களுக்கு அவர்கள் அறிந்த உண்மையை எடுத்துக்கூற வாக்குரிமை மறுக்கப்பட்டபின்னர், அலுவல் பார்க்கும் எவர்தான் எதுகுறித்துத்தான் வாய்திறந்து சொந்த முடிவைத் தெரிவிக்கப் போகிறார்கள். கையில் ஊமையாராக அவர்கள் காலங்கழிக்க வேண்டியதுதான்.

பலகாலமாக விடுதலையோடு வாழ்ந்துவரும் எந்த நாட்டிலாவது, தக்ளியும் இராட்டையும் நாட்டுப்பற்றை உண்டாக்குகிறது என்று சொல்லிக்கொண்டிருக்கும் நபர்கள் அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கிறார்களா? பள்ளியில் பயிலும் சிறுவர்கள் கையில் தக்ளியைக்கொடுத்து ஆசிரியர்கள்கையில் இராட்டையைக் கொடுத்து, நாட்டுப் பற்றையும் தொழிற் கல்வியையும், இளமையிலிருந்தே மக்கள் கற்றுத்தேர்வதற்காகத் திட்டப்பட்டுள்ள அருமையான திட்டத்தை புகுத்தியுள்ள பள்ளிக்கூடமும், இத்தகு திட்டங்களைத் தீட்டித்தரும் கல்விக் களஞ்சியங்களும், அதனை நிறைவேற்றுவதற்கென அதிகார பீடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் விசித்திர மூளை அமைந்துள்ள அமைச்சர்களும், இதுபற்றிக் கவலை எதுவும் இன்றி 'என்னால் ஆவது இனி ஒன்று இல்லை; எல்லாம் அவன் செயல்' என்று பாசுரம்பாடிக்காலங் கழிக்கும் மக்களும் நிரம்பியுள்ள நாடு, வேறெங்காவது இருக்கிறதா?

ஒன்றுக்கும் உதவாத இந்தப்பாடமுறைகளைப் புகுத்தி சிறுவர்களைச் சித்திரவதை செய்வது ஒருபக்கம் இருக்க, அதே நேரத்தில் இந்த நாட்டில் பெரியபெரிய தொழிற்சாலைகளை நிறுவப்போவதாகவும், அதற்கான இயந்திரக் கல்வியின் நுணுக்கங்கள் தெரிந்தவர்களைப் பயிற்றுவிக்கப் போவதாகவும் படாடோபமாகப் பேசுகிறார்கள். எவ்வாறு சாத்தியமாகுமோநாம் அறியோம்!

மற்ற நாடுகளில் மாணவ மாணவிகளுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கும் முறைக்கும் இங்குள்ள கல்விமுறைக்கும் உள்ள வேறுபாடு, மிகப்பெரிது. ஒன்றுக்கொன்று எந்தவகையிலும் பொருந்தாதது. அங்கு பழமைக்கு இடமில்லை. இங்கு புதுமைக்கு இடமில்லை. ஆனால், இங்கு பழமையையும் புதுமையையும் ஒன்றாகப் பிணைத்து மோரில்வெண்ணெய் தேடுவதுபோல் உருவற்ற காரியங்களைச் செய்வதில் ஈடுபடுகின்றனர்




மேலே குறித்துள்ள படத்தில், ஆர்வமிக்க சிறுவன் ஒருவனுக்கு, ஒரு விமானத்தின் சிறு உருவத்தைக் காட்டி, அதுபற்றி விளக்கத்தையும் கூறுகிறார். அந்த விமானம் மணிக்கு 144 மைலுக்கு அதிகமாகப் பறக்கக் கூடியதாம். அதற்கு 'ஜக்கெர்நாட்' என்று பெயரிடப்பட்டிருக்கிறதாம். லண்டன் நகரில் நடந்த பொருட்காட்சிச் சாலையில் இது நடக்கிறது.

ஆனால்!

இங்கு?

தக்ளி தரப்படுகிறது.

கைராட்டை, அதனினும் உயர்ந்தது என்று கூறி, அதுபற்றி விளக்கமும் பயிற்சியும் தரப்படுகிறது!

அங்கு காலத்துக்கேற்ற கல்வி தரப்படுகிறது.

இங்கு?

அதுவும் விடுதலை நாடுதான்!

இதுவும் விடுதலை நாடுதான்!?

ஏன் இந்த வேற்றுமை? அங்கு தரப்படுகிற கல்வி, காலத்திற்கும் அறிவியல் பண்பாட்டிற்கும் ஒத்ததாக இருக்கிறது. ஆனால் இங்கு தரப்படும் கல்வி, குறைந்தது ஏழெட்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதாகவும், புதுமையைக் கண்டு அருவருப்புக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கிறது!

அங்கு புத்துலகிற்குப் பாதை அமைத்துத் தருவதாக இருக்கிறது. இங்கு, பழமைக்குப்பலந்தேடுவதாக இருக்கிறது.

படத்திலே காணும் சிறுவனுக்கு, அந்தப் பொம்மை விமானத்தைக் கண்டதும், அவன் உள்ளத்திலே எந்தெந்த வகையான கனவுகள் தோன்றக் கூடும்? தக்ளியைக் கண்ட தம்பிக்கு எந்த வகையான கற்பனைகள் பிறக்கும்!

படத்தில் பார்க்கும்சிறுவனுக்கு, சந்திர மண்டல யாத்திரை, அதற்கான முயற்சியை மேற்கொள்வது, வேண்டிய கருவிகளைக் கண்டு பிடிப்பது, இன்னும் இது போன்ற தேவைப்படும் இனபக் கனவுகள் அன்றோ தோன்றும்?

நமது தம்பியின், நினைப்பும் முனைப்பும் செயலும்எதிலேசென்று படியும்!

ஆகாய விமானத்தைக் காணும் சிறுவனுக்கும், அது போன்ற கல்வி பயின்ற மற்றவர்க்கும் நாட்டுப் பற்று இல்லாமல் போய் விட்டதாக எவராலாவது சொல்ல முடியுமா? அல்லது, தக்ளிக்குத்தான் நாட்டுப் பற்றுத்தெரியும், ஆகாய விமானத்துக்குத் தெரியாது என்று எவர்தான் கூற முந்துவர்?

இன்றைய உலக நிலையில் எந்தக் கல்வி தேவையானது, எதனை நமது சிறுவர்களுக்குப் போதிப்பது நியாயமானது, என்பதை நீங்களே சொல்லுங்கள்—வேண்டாம் வேண்டாம்— சிந்தியுங்கள்!

படிப்பான், புகழோடு வாழ்வான், என்னும் நம்பிக்கையோடு, பெற்ற சிறுவர் சிறுமியர்களை பள்ளிகளுக்கனுப்பும் பெற்றோர்களே, போதிக்கும் ஆசிரியர்களே, அதிகாரத்தின் துணை கொண்டு ஆகாத திட்டங்களைப் புகுத்திச் சிறுவர்களைச் சித்ரவதை செய்யும் சீரற்ற அமைச்சர்களே, நீங்கள் தனித்தனியாகவோ அல்லது ஒன்றுகூடியோ சிந்தித்துக் கூறுங்கள் எது நியாயம் என்பதை!

●

15-ம் பக்கத் தொடர்ச்சி

"ஒருகாணி நிலம் வேண்டும்" என்று கானத்தைக் கிளப்பினார் கவிஞர். கேட்பாரில்லை; காற்றில் கலந்தது. மாகாளிக்கு மனுச் செய்து கொண்டார்; மாதா மனம்இரங்கினதாகத்தெரியவில்லை.

இன்று, கலசப்பாக்கத்தில்மட்டும் அல்ல — நாட்டு மக்களில் பெரும்பாலோர் கேட்கிறார்கள் 'ஒரு காணி நிலம்வேண்டும்' என்று. இதுபலரின் இருதய கீதமாகப் போய்விட்டது. காற்றில் கலப்பதோடுமட்டுமன்றி மக்கள் கருத்திலும் மந்திரிமார்கள் செவியிலும் புகுந்து குடைகிறது. பாரதியார் போன்று 'மாகாளி'யை அல்ல; நாடாள வந்தவர்களைப்-பார்த்துக் கேட்கிறார்கள். மாகாளிக்கு மனுப்போடும்நிலைமாறி, இரண்டாம் கட்டத்திற்கு—இடம் தெரிந்து கேட்கும் பக்குவத்திற்கு— வந்திருக்கிறார்கள்.

இது, எவ்வளவு பெரிய மாற்றம் என்பதையும், இந்தக் கோரிக்கையில் மறைந்து கிடக்கும் உரிமை வேட்கையையும் நாம்உணருகிறபொழுது, நம்மை அறியமேலே நாம் மகிழ்ச்சி அடைகிறோம். நமது உழைப்பு வீண் போகவில்லை; எதிர்பார்க்காத இடத்திலும் இடம் பெற்றுவிட்டதே என்று நாம் உள்ளம் பூரிக்கிறோம்.

இதனைக் கண்டு நிதிபடைத்த நல்லவர்கள் சீறவேண்டாம்; சிந்திக்க வேண்டும். இது நிந்தனை அல்ல; நிலைமை விளக்கம்.

## மதுவிலக்கு

அக்டோபர் முதல் தேதியிலிருந்து, வடமேற்குஎல்லைப்புற மாகாணத்திலும், மேற்குப்பஞ்சாப் மாகாணத்திலும், பூரண மதுவிலக்குத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப் படுமெனப் பாகிஸ்தான் சர்க்கார் அறிவித்துள்ளது.

# சிறு நரியின் சிங்க வேஷம்!

‘இது எங்கள்நாடு, நாங்கள் பிறந்த பொன்னாடு, நாட்டாட்சியை நாங்கள் மீண்டும் பெற, நல்லாட்சி அமைக்க, நலம்பல கொண்டுசேர்க்க நாங்கள் நினைப்பது நடவாதா? கூடாதா?’

‘எங்கள் நாட்டை ஏமாந்த நேரத்தில் எடுத்துக்கொண்டு, எந்தவகையிலும் பாத்யமில்லாத சொத்துக்குச் சொந்தம் பாராட்டும் பாதகத்தை, பார்த்துப் பார்த்து நாங்கள் பரமானந்தம் கொள்ளவேண்டுமா? படித்தவர்—பாமரர் அனைவருந்தான் பாராளும் பொறுப்பைப் பிறரிடம் கொடுத்துவிட்டு, அவர்களின் பாதங்களைப் பல காலமாக வருடிக்கொண்டு கிடக்கிறீர்களே, மான உணர்ச்சி உங்களுக்கு இல்லையா? மங்கியா போய்விட்டது அந்தப் பண்பு? என்று விடுதலை பெற்றநாடுகள், நாங்கள் வெட்கத்தால் தரை நோக்கும்படியாக, கேலியும் கிண்டலும் கலந்து பேசுகின்றனவே. பாராளுவோரே! இது, உங்கள் செவி புகவில்லையா?’

‘எங்கள் நாட்டில் எது இல்லை என்று எங்களைப் பாதுகாக்கும் பொறுப்பைப் பலகாலமாகக் கொண்டிருக்கிறீர்கள்? நாங்கள் என்றோ பக்குவம்பெற்றிருப்போமே, உங்கள் கூட்டுறவு-கொடுமை இல்லாதிருக்குமானால். அந்தநாள் எப்படியோ ஆண்டீர்கள்; இனியாவது அந்த எண்ணத்தை விட்டுத்தொலையுங்கள். எங்கள் நாட்டை எங்களிடம்கொடுத்துவிட்டு, விடுதலை தந்துவிட்டு, வெளியேறுங்கள் வெள்ளையர்களே! வேண்டத் தகாதவர்களே! வந்தவழியே திரும்பிப் போங்கள்!’

‘போய்வாருங்கள், மேலும் எங்கள் பொறுமையைச் சோதிக்காதீர்கள். பொறுத்திருந்தோம் பல காலமாக, நீங்கள் தொலையும் வழியைக் காணோம், வெளியிடுகிறோம், உங்களுக்கு வேதனைதரும் இச்சொற்களை. எங்கள் நிலையில் நீங்கள் இருந்தால்—உங்கள் நாட்டில் வேறொருவன் ஊராண்டால், உங்கள் மனம் என்ன பாடு படும்—கற்பனை செய்துபாருங்கள், எங்கள் நெஞ்சிருக்கும் நிலையை நன்குணர்ந்து கொள்வீர்கள்.’

‘இங்கு, எங்கள் நாட்டில் நல்ல காடுகள் இருக்கிறது, நெல் விளைகிறது, கரும்பும் கனிவகை பலவும் பயிராகின்றன, மண்ணுக்கடியில் மைக்கா, இன்னும் பல பொருட்கள் குவிந்து கிடக்கின்றன. இவ்வளவு இருந்தும் நாங்கள் கோவணாண்டிகளாகவே இருந்து வருகிறோம்.’

‘எங்கள் மக்கள் வறுமையால் வதைகிறார்கள்; நீங்கள் வாழ்கிறீர்கள். நாங்கள் உழைக்கிறோம்; நீங்கள் உருஞ்சுகிறீர்கள். நாங்கள் பாடு படுகிறோம்; நீங்கள் பலன் அனுபவிக்கிறீர்கள். நாங்கள் எலும்புருவாகிறோம்; நீங்கள் மாமிசமலை எனக் கொழுக்கிறீர்கள். எவ்வளவு காலத்திற்கு நாங்கள் ஏமாளிகளாக இருப்பது? நீங்கள் ஏமாற்றிப்பிழைப்பது? ஏற்குமா இது? நாகரிகத்தில் நனி சிறந்ததாகச் சாற்றும் நாடாள வந்தவர்களே, நவிலுங்கள்?’

‘இருக்கலாமா இந்த வேற்றுமை? சொந்த நாட்டிலே பிறரின் அடிமையாக, எடுபிடி ஏவலாளிகளாக, எவ்வளவு காலத்துக்குத் தான் காலங் கழிப்பது? விழித்துக்கொண்டோம் நாங்கள். விடுதலை வேண்டுகிறோம். அதற்கு இதோ எங்கள் ஆவியை அர்ப்பணிக்கிறோம் என்று சூளுரைத்து விட்டோம். எப்படியும் சுகம் பெறுவோம் முடிவில்.’

‘எங்கள் நாட்டிலே நல்ல துறைமுகங்கள் உண்டு. தொழில் திறம் தெரிந்த மக்கள் நிரம்ப உண்டு. 2,41,100 சதுரமைல் நிலப்பரப்பைக் கொண்டது எங்கள் நாடு. நாங்கள் நாற்பது இலட்சம் மக்கள் இருக்கிறோம். நாங்கள் நாய்கள் பன்றிகள் அல்ல. நாட்டு மக்கள். நலிந்து போயிருக்கிறோம். நல்லாட்சி நாங்களே அமைத்துக்கொள்ளுகிறோம். அதற்கான பண்பாடு பெற்றுவிட்டோம். இது இருபதாம் நூற்றாண்டு.’

‘சுயாட்சி எங்கள் பிறப்புரிமை; இதனைத்தடுக்கத்-தகர்க்க எவர்க்கும் இல்லை உரிமை. இது எங்கள் போர் முழக்கம். விடுதலைபெறும் வரையில், இப்பாசறைப் பாட்டு ஒலித்துக் கொண்டுதான் இருக்கும்.’

* * *

சென்ற ஆண்டில் மார்ச்சுமாத முடிவில், மடகாஸ்கர் தீவில் விடுதலைக்கிளர்ச்சி வெளிக்காட்ட ஆரம்பித்தது. தென்ஆப்ரிக்காவை ஒட்டியுள்ளது அந்தநிலப்பரப்பு. பிரிட்டிஷ் தீவுகளைவிட மூன்றுபங்கு நிலப்பரப்புக்கொண்டது. 1890வரையில் பிரெஞ்சு சாம்ராஜ்யத்தின் பாதுகாப்பிலும், பின்னர் பிரான்சின் குடியேற்ற நாடாகவும் மாறி, இன்றும் அதேபிடியில் இருந்துவருகிறது.

நல்ல செழிப்பான நாடு, எரிமலை, வெந்நீரூற்று நாட்டின் சிறுபகுதியில் இருக்கிறது.

நல்ல துறைமுகங்கள் இருக்கின்றன. 40-லட்சம் மக்கள் வசிக்கின்றனர். அரிசி, சோளம், கரும்பு, காப்பிக்கொட்டை, பலவகை மரங்கள், தோல், மைக்கா முதலியன ஏற்றுமதியாகின்றன. விலையுயர்ந்த கற்களுக்கும் பேர்வாய்ந்தது.

சென்ற ஆண்டில் மார்ச்சு இறுதியில் தொடங்கிய விடுதலைப்போர், மூன்று திங்கள்வரை விட்டுவிட்டு நடைபெற்றது. வெள்ளையரே வெளியேறுங்கள்! என்பது அல்ல அங்கு நிகழ்ந்த விடுதலைக்கிளர்ச்சியின் லட்சியம். பிரஞ்சுயூனியனில் ஒரு அங்கமாக இருக்கும் நிலையில், அந்நாட்டு மக்களுக்கு அரசியல் அந்தஸ்து உயர்ந்தால் போதுமென்றே கிளர்ச்சி செய்தனர்.

கேட்டது—விரும்பினது—கிடைத்ததா — இல்லை. துப்பாக்கி வேட்டு, பீரங்கிக்குண்டு, ஆகாயக் குண்டுவிச்சு, போர்க்கப்பல்கள் செய்த ஆர்ப்பாட்டம் அனைத்தும், விடுதலை கேட்டவர்களுக்குப் பரிசாக வழங்கியது பிரெஞ்சு ஏகாதிபத்தியம். 20000 மக்களின் உயிரைக் குடித்தது. மடகாஸ்கர் மக்கள், அடிமை விலங்கை உடைத்தெறிய, தங்களில் 20-ஆயிரம் பேர்களைப்பலிகொடுத்தனர்.

இத்துடன் அடக்குமுறை நின்றுவிடவில்லை.

முடிவில் விடுதலைக்கிளர்ச்சிக்குக் காரணமாக இருந்த — பொறுப்பேற்று நடத்திய சிலரைத் தூக்கு மேடைக்கும், சிறைக்கும் ஒப்படைத்திருக்கிறது.

சென்ற டிசம்பரிலேயே தலைவர்களெனக் கருதப்பட்ட பதின்மருக்கு மரணதண்டனையும், மற்றும் பலருக்குச் சிறைத்தண்டனையும் கொடுக்கப்பட்டது.

டாக்டர் ஜோசப்ராவோஹராங்கி, பிரெஞ்சு பாராளுமன்றத்தின் அங்கத்தினர். சிலநாளில் தூக்குக் கயிற்றினை முத்தமிடப்போகிறார்.

ஜோஸப் ரசிடா, இவர் மற்றொரு பிரெஞ்சு பாராளு மன்றத்தின் அங்கத்தினர். இவரும் விரைவில் தூக்கில் தொங்க இருக்கிறார்.

மேலும் மூவருக்கும் தூக்குமரம் காத்துக்கொண்டு இருக்கிறது. சுதந்திரம்–சமத்துவம்–சகோதரத்துவம் என்னும் உயர்ந்த லட்சியங்களுக்காக, பலரைப்பலி கொடுத்து, மக்களாட்சி மன்றம் அமைத்து, அதே உயர்ந்த கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இன்றும் ஆட்சி புரிந்து வருவதாகக் கூறிக்கொண்டு, அதிகாரத்தில் அமர்ந்துள்ள கோணல் மதியினர், உள்ளத்தில் எழுந்த உரிமைக் கனலை உலகுக்கு உணர்த்தியதற்காகக் கொடுக்கப்பட்ட, விலைமதிக்கொணாத பரிசு இதுவாகும்!

கொற்றவன் கொடுங்கோலனாகிவிடவே, கண்கள் கனல் கக்க, காவலனின் காட்டு முறையை விரட்டி அடிக்க, வீறிட்டெழுந்து, வீணனை விரட்டி அடித்த வீரர்களின் வழி வந்தவர்கள் இவ்வாறு செய்வது என்றால், முன்னோர்களின் நேர்மைக்கும்—வீரத்திற்கும் களங்கமுண்டாக்கும் காரியம் இதுவன்றி வேறு எதுவாக இருக்கமுடியும்!

பாராளும் பார்த்திபன் பொறுப்பை, பாரில் மற்ற நாடுகள் உணர்வதற்கு முன்பு உணர்ந்து, தவறிய மன்னனின் தலையைத் தரையில் உருளச் செய்து, மக்களின் தளைகளைத் தகர்த்தெறிந்து, தரணிக்கெல்லாம் விடுதலை வாழ்வின் மேம்பாட்டை விளக்கமுறக் காட்டிய வெற்றி வீரர்கள் வாழ்ந்து புகழ் பரப்பிய நாட்டில்தான், பிரான்சில் அவர்களின் பின்சந்ததியார்கள்—விடுதலைகேட்ட குற்றத்திற்காக, வீரர்களின் தலையை அறுக்கும் தகாத செயல் புரிகிறார்கள் என்று ஏடுகளிலே எழுதப்படுகிறது.

இது, பிரான்ஸ்தேசத்தை ஆண்ட பதினாறாவது லூயி அரசனுக்கு, இறுதியில் மக்கள் செய்த மரியாதையாகும். அவன் சிரத்தையும், அவன் பாதுகாப்பில் இருந்த சிலரின் சிரங்களையும், பிரான்ஸ் நாட்டுமக்கள் திருகி எறிந்தனர். புரட்சி மணத்தை — தத்துவத்தை உலகுக்கு அளித்தனர் அன்றைய பிரெஞ்சு மக்கள். இது நடந்தது 18-வது நூற்றாண்டின் முடிவில். ஆனால் இன்று இருபதாம் நூற்றாண்டில், மடகாஸ்கர் மக்களின் விடுதலைக் கிளர்ச்சியைத் தகர்த்தெறிய, 16வது லூயி அரசன் கையாண்டு தோற்றுப் போன, அந்தப்பழைய தூக்குமேடையைத் துணைக்கழைக்கிறார்கள், லூயி மனப்பண்பு கொண்டுள்ள ஆளுவோர், லூயியின் முடிவு தெரிந்தே!

* * *

ஜோசப் ரவோ ஹராங்கி தூக்குமேடை ஏறப்போகிறான். செய்த குற்றம்—தன் தாய்நாட்டின் விடுதலையைக் கோரினது.

இந்தக் காட்சியை மக்கள்—மடகாஸ்கர் மக்கள் கற்பனை செய்து பார்த்தால்:—

"என் நாட்டு மக்களே, என்னைப் பெற்ற தாய்மார்களே, இளங்காளைகளே! இதோ, இங்கிருக்கிறேன், என்னைப் பாருங்கள்! எவருக்காக—எவரால் எனக்கு இந்தக்கதி வந்தது சிந்தியுங்கள்!

'எலும்புக் கூடுகளாக நீங்கள் இருப்பதை, என்னால் சகிக்கமுடியவில்லை! உங்களுக்காக வாழ்வு வேண்டினேன்! எனக்காக அல்ல; உங்களுக்காக; உங்கள் பின்சந்ததியார்களுக்காக! ஆளுவோருக்குச் சாடி சொல்லி, அவர்கள் அணைப்பிலே அமர்ந்து, பணம்—பதவி—பட்டம்—இவ்வளவும் பெற்றிருப்பேன், எனக்கு மட்டும் வாழ்வு கிடைத்தால் போதுமென்ற நினைப்பிருந்தால்! சாடைகாட்டினால் போதும், சிலருக்காவது சர்வாதிகாரி ஆக்கப்பட்டிருப்பேன்! செய்யவில்லை! சீறினேன், அச்சிறுமதி படைத்தோரை!'

'சொந்த நாட்டில் சிங்கமென இருக்கவேண்டிய நாம் சிறுநரிபோல் இருப்பதா? அடிமை விலங்கா நமக்கு அணிபணி? ஓர் இனம் மற்றோர் இனத்தை அடக்கி ஆள்வதா? அடுக்குமா இந்தக் காட்டுமுறை? தகர்த்தெறியவே முயன்றேன், தாரணியாளுவோர் தந்துள்ளனர் இந்தப் பரிசை! இது உங்களுக்குச் சம்மதமா? கூறுங்கள்! மனம்விட்டுப் பேசுங்கள்!'

'ஏன் மண்ணை நோக்குகின்றீர்கள்? கண்ணைக் கசக்காதீர்கள், கோழைகளல்லவே நீங்கள்! நிமிர்ந்து நில்லுங்கள்! என்னைப் பாருங்கள்! கிடைக்கும் பரிசை அறிவேன், கிளர்ச்சியில் தலையிடுமுன்னரே! தெரிந்துதான், இந்தப்பயங்கரப் பாதையில் கால் வைத்தேன்! நான் ஒருவன் தூக்குமேடையில் தொங்குவது, என் பெற்றோர்களுக்கு மட்டுந்தான் நஷ்டம். அன்னிய ஆட்சி-மக்களை மதியாத ஆட்சி, நீடித்து இருப்பது, நம்மனைவருக்குமன்றோ பெரும் நஷ்டம்—வேதனை! நான் ஒருவன் இறந்தாலும் நீங்கள் நல்ல நிலைபெற்றால்போதும்!'

இருபதாம் நூற்றாண்டின் இணையில்லாப் பண்பான, மக்களாட்சிக் கிளர்ச்சியின் தன்மையை உணரும் புத்தியும், யூகமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துக்கு இருந்ததனால், இன்று, சுதந்திரம் தந்தோம் என்று பெருமையுடனும் பூரிப்புடனும் அந்த ஏகாதிபத்யம் கூறிக்கொள்ளவும், ஆமாம்! பெற்றோம், என்று இந்தியாவும் கூறவும், இருநாடுகளும் ஆண்டவன் அடிமை என்ற ஆபத்துத் தரும் நிலையிலிருந்துவிடுபட்டு, நேசர்களாகும் நிலையும் உண்டாக முடிந்தது. பிரான்சு, டச்சு, போர்ச்சுகல், ஏகாதிபத்யங்களுக்கு, இந்தப்பண்பு கிடையாது. எனவேதான், பொன் விளையும் பூமி எனப்படும் துணைக்கண்டமான இந்தியாவையும், வளமிக்க பர்மாவையும், கடற்கோட்டையாகக்கூடிய சிலோனையும், தன் பிணைப்பிலிருந்து விடுவிக்கமுன்வந்த பிரிட்டிஷ் விவேகத்தையும், அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் கண்டும்கூட, இந்தச்சிறுநரிகள் சிங்கவேஷம் போட்டுப்பார்க்கின்றன. ஒரு நாட்டை மற்றொரு நாடு ஆளுவதை—எந்த முறைகொண்டு இருப்பினும் சரி—வாள்-ஜெபமாலை-தராசு எனும் எவ்விதக் கருவியின் துணைகொண்டு ஆள்வதாயினும், பண்புள்ள மக்கள் ஏற்கமாட்டார்கள் - எதிர்த்தே தீருவர். ஏகாதிபத்யகாலம் மலையேறிவிட்டது என்ற காலக்குரலையும் கேட்க மறுக்கும் இந்தச்சிறு ஏகாதிபத்யங்களின் போக்கு, அவற்றின்மதிப்பை மாய்க்கிறது. சில பலரைத் தூக்கிலிட்டுவிடுவதனால், தமது ஏகாதிபத்யப்பிடியைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று எண்ணும், ஏமாளித்தனம், பலனைத்தாராது. மட

(12-ம் பக்கம் பார்க்க)

# அதிசயமல்ல அண்டப்புளுகு!

★

ஆறு காலுடைய எருமைக் கன்று, மூன்று கண்ணுடைய மாடு. ஆண்பெண் இல்லாது அலியாக இருக்கும் கோழி, இருபக்கம் தலையுள்ள பாம்பு, கிளைகளை உடைய பனைமரம், இன்னும் இதுபோன்ற பலவற்றை இயற்கையின் விசித்திரம் என்பர், இயற்கைக்கு இவை மாறுபட்டிருக்கிற காரணத்தால்.

சிவலிங்கம் சாட்சி சொல்வது, எலும்பு பெண்ணுருவாவது, பனை ஓலைத்துண்டு வெள்ளத்தை எதிர்த்துச்செல்வது, கருங்கல்பாறை மிதப்பது, நரி பரியாவது, அறுத்த கறி சமைத்தப் பிள்ளை உயிர்பெற்று எழுந்து வருவது, பன்றியும் அன்னமும் அடிமுடி தேடுவது, ஒருவர் முதுகில் பிரம்பால் அடித்ததும் அனைவர் முதுகிலும் அடிவிழுவது, யானை கதறினதும் ஆண்டவன் வருவது, சிலந்தி பந்தல் போடுவது, சிவனாரைப் பூஜித்த யானை சிவபதம் அடைவது, போன்றவைகள் எங்கும், எக்காலத்திலும் நிகழ்ந்திருக்க முடியாத கட்டுக் கதைகள்—அண்டப்புளுகுகளேயாகும்.

அந்தந்த மதவாதிகள், தங்கள் தங்கள் சமயங்களுக்கு ஆள் சேர்க்கவும், அவ்வாறு சேர்த்த பேர்களை ஏமாற்றிச் சுகஜீவிகளாகக் காலங் கழிக்கவும் செய்துவைத்த தந்திரோபாயங்களேயாகும்.

இவையனைத்தும் காட்டுமிராண்டிக் காலத்துக் கருத்தோவியங்களாகும். இந்தக் குருட்டுப்போக்கு, இந்த நாட்டில் மட்டுமன்று, எந்த நாட்டிலும் ஓர் காலத்தில் மக்களிடம் இருந்துதான் வந்திருக்கிறது. இந்த இழிந்த நிலை—இருண்ட மதி—மற்ற நாடுகளில் எல்லாம் மாறி. அறிவுக்குகந்த புதியபோக்கு ஏற்பட்டுப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன.

அங்கு படித்தவர்கள், பழைமைக்குமெருகிட்டுப்பளபளப்பாக்கி, காலத்தால் கவர்ச்சி இழந்துபோன கருத்துகளுக்கெல்லாம் தத்துவார்த்தம் கூறி, என்றென்றும் மக்களின் மதி அந்தகாலத்திலேயே தவழ்ந்து கொண்டிருக்கச் செய்யும் சீரற்ற செயலை மேற்கொள்ளவில்லை. மூடமதியினரான முடிதாங்கிகள் தரும் தண்டனைக்கும், குருமார்களின் கோபத்திற்கும் ஆளாகி ஆவிபிரிய நேரிட்டாலும், உயிருடனே கொடுமைக்குள்ளானாலும், மக்களுக்கு மதியூட்டும் மார்க்கத்தைக் காணப் பின்னடையவில்லை. மக்களின் அறிவியல் வளர்ச்சிக்கு ஆக்கந்தேடினர். தேவாலயத்திலிருந்த தேவர்களையும், அவர்களைக் குறித்துக்கூறப்படும் கற்பனைகளையும், அறிவைக்கெடுக்கும் அபத்தக்களஞ்சியங்களெனத், தயவு தாட்சண்யம் பார்க்காமல் அம்பலப்படுத்தினர், சிந்தனை வளர்ந்தது. புதுயுகமும் பிறந்தது. மக்களும் புதுவாழ்வும் வளமும் பெற்றனர்.

வேறு துறையிலே வேலை பார்க்கும் படித்தமேதாவிகள் இருக்கட்டும், படித்துப் பட்டம் பெற்று, பல நாடு சுற்றித்திரிந்து அனுபவம் பெற்று, மக்கள் அறிவை, ஆட்டிப் படைக்கும் நிலையிலுள்ள, பத்திரிகை ஆசிரியர்கள்தான் எத்தகைய பணியை மேற்கொண்டுள்ளார்கள்?

கோகிலாட்டமி, மகாத்மியம்—சிவராத்திரி மகாத்மியம் — இது போன்றவற்றுக்குத்தானே பத்திபத்தியாக, பெர்லின்பிரச்னை — அமெரிக்காவின் ஆதிக்கம் — சோவியத்தின் தொழில்வளம் — முதலியவற்றிற்கு ஒதுக்கும் இடத்தைக் காட்டிலும் மிகுதியாக ஒதுக்குகிறார்கள். இவ்வாறு செய்வதில்லை என்று இவர்கள் மறுத்துங் கூற, இவர்களுக்கு நாக்குண்டா?

“8 வயதுக் கிராமப் பெண் சுரஜ் கடவுள்களுடன் சேர்ந்து இருந்ததாகக் கூறுகிறாள். கடந்த 10 நாட்களாக இது நகரில் பரபரப்பைக் கிளப்பிவிட்டிருக்கிறது. யாவரும் அப்பெண்ணை வந்து பார்க்கின்றனர். சபர்மதி கரையிலுள்ள கிராமத்தில்தான் இச்சிறுமி வசித்து வருகிறாள்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான், இதர ஹிந்து கடவுள்களை நேரில் கண்டதாக இச்சிறுமி தாயாரிடம் கூறினாளாம். இதிலிருந்து கடவுள்களுடன் சேர்ந்து இருந்துவிட்டு வந்ததாக இவள் கருதுகிறாள். ஓரோர் முறை நாட்டியமாடி புல்லாங்குழலும் ஊதுகிறாள்.”

“தினமணி” 6-10-48 இதழில் இச்செய்தி வந்திருக்கிறது. இப்போது கூறுங்கள், நமது படித்தவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்களென்பதை!

டெலிபிரண்ட், பல நிறங்களையும் ஏககாலத்தில் பல பக்கங்களில் அச்சடித்து, மணிக்கு ஆயிரக்கணக்கில் மடித்துத் தரும் இயந்திர சாதனம், பலநாடு சுற்றுப் பிரயாண அனுபவம், இவ்வளவும் எதற்குப் பயன்படுகிறது, பார்த்தீர்களா? இத்தகைய பிரசாரம் புரிந்துவரும் படித்தவர்களின் நிலையை எதற்கு ஒப்பிடுவது?

கட்டுரையின் முதலில் கூறப்பட்டிருப்பதுபோல் இது இயற்கை அற்புதமல்ல, பின்னால் குறிப்பிட்ட புராணகால அபத்தமாகும் இது.

சிறுமிக்குப் பெற்றோர்கள் போதித்த புராண அறிவு, முற்றிவிட்ட காரணத்தால், ஒருவேளை கோபிகைப் பெண்களில் ஒருத்தியாகத் தன்னையும் பாவிக்கும் அளவிற்கு, அச்சிறுமிக்குப் பித்தம் தலைக்கேறிப்போயிருக்கலாம்—சம்பவம் ஓரளவாவது உண்மையை வைத்து வெளியிடப்பட்டிருப்பின். ஆனால், படித்த பத்திரிகை ஆசிரியர்களுக்கே, இன்னும் தெளிவு ஏற்படாமல் இருக்கிறபொழுது, சிறுமியின் சிந்தனையில் கோளாறு இருப்பது ஆச்சரியமன்று!

இத்தகைய ‘அற்புதங்கள்’ நடைபெறுகின்றன என்ற செய்திகள் பத்திரிகைக்காரர்களுக்குக் கிடைத்தவுடனே, எவ்வளவு இன்றியமையாத செய்திகள் இருந்தபோதிலும் அவற்றை நீக்கிவிட்டு இவற்றிற்கே முதலிடம் கொடுத்து வெளியிட வேண்டுமென்ற நினைப்பு அவர்களுக்கு எப்படியோ உண்டாகிவிடுகிறது. 400, 500 வயதுள்ள ஒருவர் உயிரோடு இருக்கிறார் என்ற செய்தி கிடைத்தால், அதுபற்றிய முழு உண்மைகளையும் அறிந்த பின்பே பத்திரிகைகளில் வெளியிட வேண்டுமென்ற நல்லெண்ணம் பெரும்பான்மைப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு உண்டாவதில்லை. இவ்வாறு வெளியிடப்படும் ‘அற்புதச்’ செய்திகள் வெளியிட்ட சில காலத்துக்குள் மறைந்துவிடுகின்றன. கடவுளோடு பேசிய பெண் இப்ப என்ன செய்துகொண்டிருக்கிறாள்? 465 வயதுள்ள மனிதன் இப்போது எங்கு

(12-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு
காஞ்சி] 10—10—48 [ஞாயிறு

# "நம்ம சர்க்கார்"

## 3

மஞ்சள் பெட்டி மங்களகரமானது என்று சொன்ன மகானுபாவர்களே! மஞ்சள்பெட்டி வந்தபிறகு நாங்கள் கண்டது பஞ்சம்தானே!! மஞ்சப் பெட்டி பஞ்சப் பெட்டியாகி விட்டதே. ஏன்?

வயிறார உணவு கிடைக்கும், வெள்ளைக்காரச் சுறண்டல் ஒழிந்தால் என்று பேசினீர்களே, வெள்ளையன் ஒழிந்தானே, ஏன் எங்களுக்குச் சோறு கிடைக்கவில்லை.

உணவுப் பொருளின் விலை ஏன் விஷம் போல ஏறி வருகிறது.

ஆடைக்கு நாங்கள் இப்படி அலைகிறோமே, ஐயா! ஆளவந்தாரே, தர்மமா? நாட்டிலே ஒற்றுமையை நிலைநாட்டுவோம் என்று பேசினீர்களே, நல்லவர்களே, உங்கள் காங்கிரஸ் கமிட்டிகளிலேயே இப்போது, 'அடிதடி' அளவுக்கு இருக்கிறதே ஏன்?

சிலம்பு போட்டு, போட்டு, ஆவேசமாடவைக்கும் பூஜாரிகள் போல, வீராவேசமாகப் பேசிப் பேசி, எங்களை ஆட்டிப் படைத்தீர்களே, ஐயன்மீர்! ஆட்டம்நின்றதும், அலுப்பும் சலிப்பும் தான் கண்டோமே தவிர, ஆனபலன் ஒன்றும் காணோமே!

* * *

இவ்விதமாகவெல்லாம், கேள்வித்தாள்கள் வந்து குவிகின்றன தலைவரிடம்—அவர் முகம், மலருமா! கணைக்கிறார்—கண்களைக்கூட்டத்திலே செலுத்திப் பார்க்கிறார்—கேள்வித்தாள்களை, அடுக்கி வைக்கிறார் ஒரு புறமாக.

பதில் சொல்லுமய்யா, பதில் சொல்லும்! கேள்விகளுக்குப் பதில் வேண்டும்! பிரசங்கம் போதும், எங்கள் சஞ்சலத்துக்குப் பரிகாரம் வேண்டும்.—என்று, கூச்சலிடுகின்றனர், பொதுக்கூட்டத்திலே சிலர்.

வந்தேமாதரம் — என்கிறார் தலைவர்—'யார் இல்லை என்கிறார்—வந்தேமாதரம், வந்தேமாதரம் என்று ஆயிரமாயிரம் முறை, சொல்லியாயிற்று, இப்போது எங்கள் குறைகளைப் போக்க மார்க்கம் என்ன கூறும்' என்கிறார்கள் மக்கள். தலைவர், பிரதம பிரசங்கியாரைப் பார்க்கிறார்-பிரதம பிரசங்கியார், ஜாடையைத் தெரிந்துகொண்டு, பேசஆரம்பிக்கிறார், "மகாஜனுலாரா!" (மகா ஜனங்களே!) என்று அர்ச்சிக்கத் தொடங்குகிறார். "மன, ரங்கா காருஓய்! (நமது ரங்கா அவர்கள்) என்று சிலர்கூறுகிறார்கள், பிரசங்கியாரைக் கண்டதும்.

'எவரண்டே ஏமி ஒப்! ரங்கா காருகானு உன்னி, கங்கா காருகானு உன்னி மனக்கேமண்டி'—பலர் கூறுகிறார்கள். (யாராயிருந்தால் என்னய்யா. ரங்காவாக இருந்தால் என்ன, கங்காவாக இருந்தால் நமக்கென்ன) பேசுகிறார்,-பிரசங்கியார்-மக்களோ, கேள்விகளுக்குப்பதில் அளிக்கும்படி வற்புறுத்துகிறார்கள்,

ரங்கா பேசட்டும்--ஒரு பகுதியினர் கூவுகிறார்கள்.

ரங்கா, பதில் கூறட்டும்--இன்னொருபகுதியினர் கூவுகிறார்கள்.

இரு அலைகளுக்கிடையே அவர்! ஏதோ பேசுகிறார்--பிறகு, பதிலுரைப்பது என்று தீர்மானித்துக் கேள்விகளைப் பார்க்கிறார்--கேள்விகள், சாமான்யமானவைகளாகவ' உள்ளன! திகைக்கிறார்! ஒருகேள்விக்காவது ஏதோ ஒருவகையிலாவது பதில்கூறிப் பார்ப்போம்--மக்களைச் சற்றுச் சமாதானப்படுத்திப் பார்ப்போம்--என்று எண்ணுகிறார்.

உழவன் என்றால்யார்? என்று கேட்டிருக்கிறார், யாரோ ஒருவர். 'எவனொருவன், தன்நிலத்தைத்தானகவோ அல்லது கூலி ஆட்களை வைத்தோ விவசாயம் செய்கிறானோ, அவனே உழவன்'--என்று ரங்கா பதிலளிக்கிறார். இப்படிப்பட்ட பதில்அளிப்பதில் அவருக்குச் சிரமம் கிடையாது--பயிற்சியும் பழக்கமும் உண்டு--முன்னாளில் பேராசிரியராக இருந்தவர். ஆனால் கேள்வி, இந்தப் பொருள்விளக்க அளவோடு இருந்திருக்குமா! இருந்திருந்தால் ரங்கா, மளமளவெனப் பதிலைவீசி இருப்பாரே! மற்றக்கேள்விகளைப் பார்க்கிறார், மருளுகிறார்.

உழவனென்றால் யார் என்று கேள்விகேட்டவர், இந்தச்சர்க்கார் உழவர்களுக்குச் செய்துள்ள நன்மைகள் யாவை, நிலத்தை உழுபவர்களின் உழைப்பை உறிஞ்சுபவர்களை ஒழிக்காத காரணம் என்ன, ஏன் நிலத்தைஉழுது பயிரிடுபவனுக்கே சொந்தமாக்கக்கூடாது! மஞ்சள்பெட்டியின் மகத்துவத்தைப் பற்றி மக்களிடம் பேசியபோது, இப்படிப்பட்ட மகத்தான காரியங்களைச் செய்யப்போவதாக மார்தட்டிப் பேசினீர்களே — இப்போது, நம்மசர்க்கார், சர்க்கார் காரியாலய அறிக்கைகளின் தூசுதட்டிக் கொண்டு இருக்கிறார்களே, காரிய மாற்றமல், ஏன்?—என்றெல்லாம், கேள்விக்கணைகள் விடுத்தால், ரங்கா என்ன செய்வார்! பக்கத்திலே வீற்றிருந்த, லட்சண்ணா எனும் M.L.A. விடம், கேள்விகளைக் கொடுத்து விட்டு அமர்ந்துவிட்டார்.

தலைவர் அனந்தம் தம்மிடம் தரப்பட்ட கேள்விகளைப் பிரசங்கி ரங்காவிடம் தந்தார், ரங்கா, அதனை, லட்சண்ணாவிடம் தந்தார்—லட்சண்ணா என்ன செய்தார்! — பதிலுரைத்தாரா? இல்லை! என்ன நேரிட்டது பிறகு? பொதுக்கூட்டத்தில் கொதிப்பு, கொந்தளிப்பு—பதில் சொல்லு—பதில்சொல்லு!— என்று இரைச்சல். கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

சம்பவம், நடைபெற்ற இடம் சிகாகோல் — ஆந்திரவட்டாரத்தில் —செப்டம்பர் 20-ந் தேதிய, இந்தியன்எக்ஸ்பிரசில், சிகாகோலில் ஆசிரியர் ரங்கா—பொதுக்கூட்டத்தில் குழப்பம்—எனும் தலைப்புகளுடன் செய்தி வெளிவந்திருக்கிறது.

காரணத்துடனே தான், நாம்சிகாகோல் கூட்டத்தைக் குறிப்பிட்டோம்—தமிழ்நாட்டுக் கூட்டத்தைக் குறிப்பிடாமல்—ஏனெனில், இங்கு இப்படி ஒருசம்பவம் நடைபெற்றால், உடனே, "மாபாவிகள் சூனாமானாக்கள்" குழப்பம் விளைவித்தனர், என்று மகானுபாவர்கள் கூறிவிடுவர். சம்பவம் நடந்தது, ஆந்திரநாட்டில் —கருப்புச்சட்டை இல்லாதஊரில். பேசியவர் அனுமதேயமல்ல--ஆந்திர காங்கிரஸ்தலைவர், பேராசிரியர், ரங்கா.

அவருக்கு இது அங்கு! ஏன் நம்மசர்க்காரின் போக்கு, காங்கிரஸ் நண்பர்களிலேயே பலருக்குப் பிடிக்கவில்லை? உருவான முறையிலே

இதை வெளிப்படுத்த, வசதியும் வாய்ப்பும் இல்லாததால், இப்படி, சிகாகோல்கள் சில நடைபெறுகின்றன.

'நம்மசர்க்கார்' ஏற்பட்டுவிட்டது, எனவே, இதனிடம் என்ன குறை இருந்தாலும் கோளாறு இருந்தாலும் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும்--வெளியே தெரியவிடக்கூடாது --மூடிபோட்டுவிடவேண்டும்-என்று எண்ணி, கண்மூடிமௌனியாவதும் தவறு.

என்றோ ஓர்நாள் ஏதேனும் ஓரிடத்தில், சிகாகோல் நடததிச் சீற்றத்தை வெளியே செலவிடுவதும் தவறு.

இருவழிகளும், ஜனநாயகத்தை வளர்க்கக்கூடியன அல்ல — முன்னது பாசீசத்தை வளர்க்கும், மற்றது காட்டுப்போக்கை உண்டாக்கும். இரண்டுக்குமிடையே, நாகரிகமான முறை இருக்கத்தான் செய்கிறது--'நம்மசர்க்கார்' என்ற பாசத்துக்குப் பலியாகாவிட்டால், கண்ணுங்கருத்துமாக, சர்க்காரின் போக்கைக் கவனித்து, தவறுகளைத் தைரியமாக எடுத்துக்கூறி, திருத்தங்களைக்கூறி, திட்டங்களைக் கூடத்தந்து, மக்கள், ஜனநாயகத்தை மலரச் செய்யமுடியும். அதற்குப் பொது அறிவுத்திறம் வேண்டும்—சகிப்புத்தன்மை வேண்டும்—வேறு கட்சிகளிடம் விரோதம் கொள்ளும் விபரீதப் போக்கு மறையவேண்டும் —பிரச்னைகளை அலசிப் பார்க்கும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும் — சுருக்கமாகக் கூறவேண்டுமானால், நம்ம சர்க்கார் என்றால், நம்மவர்கள் — நமது நண்பர்கள்—நமது கட்சியினர் உள்ள சர்க்கார் என்ற பொருள் கொள்ளாது, நமக்காக, நாட்டுக்காக, மக்களுக்காக, நல்லாட்சிக்காக உள்ள சர்க்கார் என்ற பொருள்கொள்ள வேண்டும். சர்க்காரில் உள்ள கட்சியின், குறைபாடுகளையும் திட்டக் குலைவுகளையும், எதிர்க் கட்சி எடுத்துக்காட்டும் போது, நமது காங்கிரஸ் நண்பர்களில் சிலருக்கு, கல்லின்மீது கண்ணும் கருத்தும் செல்லுகிறதே ஒழிய, நாமும் கவனிக்கமாட்டோம் நம்ம கட்சி என்ற கனிவினால், வேறு யாரையும் பேசவும்விடமறுக்கிறோம், அப்படியானால் விஷயம் தெரிவதுதான் எப்படி, எப்போது! —என்று எண்ண நேரம் இருப்பதே இல்லை. ஆனால் கடைசிவரையில், எதிர்க் கட்சிக் கூட்டங்களில் கலாம் விளைவித்தோம், என்ற திருப்தி மட்டும், போதுமானதாகி விடாது. துவக்கததிலே, அது விசேஷமான சந்தோஷத்தையும் பெருமையையும் கூடத்தான் தரும்.

"கூட்டம் பலே ஜோராக நடந்து கொண்டே இருந்தது—பார்த்தேன் —ஓட்டல் மாடிமீது ஏறினேன்—மடியிலே கொஞ்சம் மலைப்பிஞ்சுகளோடு—இருட்டு வரட்டும் என்று பார்த்துக்கொண்டே இருந்தேன்—அதற்குள் கூட்டத்திலே, அவன் மயக்குகிறான் ஜனங்களை — மார்வாடித் தொல்லை — வடநாட்டுக் கொள்ளை—இந்தித் தொல்லை-என்றெல்லாம பேசிப் பேசி-இருட்டு புறப்பட்டது, இதுதான் சரி என்று, வீசினேன் கற்களை. விர் விர் என்று பறந்தது-யாராருக்கோ அடி—இரத்தம்கூட வந்ததாம் — கா கூவெனக் கூச்சல்-குழப்பம்-கூட்டம், கலைந்தது"-என்று பேசிக் கொள்வதிலே, பெருமையும் பூரிப்பும் எத்தனை காலத்துக்கு இருக்கமுடியும். "அந்தப் பயல்கள் பேசுவதும் சரியாகத்தானேய்யா இருக்கிறது" என்று எண்ணுவதும், "அவனுங்களுக்குத்தானேய்யா விஷயத்தைத் தைரியமாக வெளியே எடுத்துச் சொல்ல முடிகிறது" என்று இலேசாக, மறைவிலே, பாராட்டவும், "அவனுங்களேதான், கேட்க வேணுமோ-நாமேதான்கேட்போமே, தலையா போய்விடும்-நமக்கு அந்த உரிமையா இல்லை" என்று உரிமை பேசவும் அதிக காலம் பிடிக்குமென்று நாம் எண்ணவில்லை. அதற்குள், திராவிடர் கழகத்தவரிலே சில பலருக்கு, மண்டைகள் உடைபடக்கூடும், கல்லும் கட்டையும் கண்டதா, உண்மையை உரைப்பவனின் உதிரத்தைக் கொட்டச் செய்கிறோமே, இது அநியாயம் என்று. பிறகு, சிகாகோல்கள் ஏற்பட்டுவிடக்கூடும்.

நாம், குரோத புத்தியோடு கூறுவதாகவோ, வீண் விபரீத ஆருடம் கூறுவதாகவோ, எண்ணிவிடக் கூடாது. இதுபோல மட்டுமல்ல, இதைவிட விபரீதமான முறையிலே, இதற்குள் நடைபெற்றிருக்க வேண்டும், ஆனால் நல்லவேளையாக, 'மகா ஜனங்களின் கருணையின் காரணமாக' நேரிடவில்லை, என்று ஒரு மந்திரியாரே, பேசியதை ஆதாரமாகக் கொண்டே கூறுகிறோம்.

"**கடந்த இரண்டு ஆண்டுகளாக காங்கிரஸ் சர்க்கார் சாதித்தது ஒன்றுமில்லை யாயினும், அமைச்சர்கள்மீது கல்லெறியாமல், கண்ணியமாகவே நடந்து கொண்டிருக்கிறார்கள் மக்கள்.**"

இவ்வாறு விவசாய மந்திரி தோழர் மாதவமேனன், இராஜமகேந்திரத்தில் கூறியுள்ளார். இது, 29-9-48 மெயில் பத்திரிகையில் வந்துள்ளது.

மேலும் அவர் கூறுகிறார்:—

"**பிரிட்டிஷார் வெளியேறினதும் உடனே சுகபோகம் கிடைத்துவிடும் என்று மக்கள் நம்பினர். குறிப்பிட்ட ஓர் பகுதியில் மழையில்லையேல், அதற்கு பிரிட்டிஷார் இங்கு இருப்பதே காரணம் என்றனர். ஓர் குழந்தைக்கு நீர் பிணக்கு ஏற்பட்டு சுரநோய் கொண்டால், அதற்கும் பிரிட்டிஷார்மீது பழிச் சுமத்தப்பட்டது. 1947 ஆகஸ்டு 15-ந் தேதி பிரிட்டிஷார் வெளியேறிவிட்டனர். ஆனால், ஆகஸ்டு 15-ம் நாளிலிருந்து நமது நிலை மிகக் கேவலமாகப் போய்விட்டதை உணருகிறோம்.**"

எவரும் விளக்கவேண்டிய அவசியமற்ற நிலையில், அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய முறையில், தெளிவாக, அமைச்சரே அறிவிக்கிறார், மக்களின் இன்றுள்ள அலங்கோல வாழ்வை!

மந்திரி மாதவமேனன் பேசினார் இதுபோல—மக்களைப் பாராட்டினார்—உண்மையில் மக்கள் பாராட்டுதலுக்குரியவர்கள் சந்தேகமில்லை—இந்த மந்திரிகள்? பாராட்டப்படவேண்டியவர்கள்தானா?

காங்கிரஸ் ஆட்சி எதும் செய்யவில்லை.—வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார் ஒரு அமைச்சர்.

நாட்டு நலிவு யாவற்றிற்கும், முன்பு வெள்ளையரைக் குறை கூறியே பேசிவந்தோம், என்பதையும் அவரே கூறுகிறார். அதாவது எப்படிப்பட்ட முறையினாலே, ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது, என்பதைக் கூறுகிறார்.

* * *

மலையை விழுங்குவேன் என்றான் மகாதேவன்! மதிகெட்ட மன்ன

னுக்கு, மந்திரபலத்தால், அது, மகாதேவனுக்கு சாத்யமாகக்கூடும் என்ற எண்ணம் ஏற்பட்டது. மகாதேவனின் நெற்றியிலிருந்த குங்குமப் பொட்டும் கழுத்திலே இருந்த மணிமாலையும், உருட்டுக் கண்களும், உரத்த குரலும், மன்னனின் மந்த மதியை மேலும் மந்தப்படுத்தி விட்டன. மகாதேவனுக்கு ஒரு தனி மாளிகை தந்தான்—மாதம் ஆறு யிற்று — மகாதேவன், மாகாளிப் பூஜையைத்துவக்கி. பூஜைக்கு முன்பு காட்டெருமை அளவிருந்த மகாதேவன், பூஜை வளர வளர யானை அளவானான்—மக்கள் யோசிக்கலாயினர்—மலையை எப்போது விழுங்கப் போகிறான் மகாதேவன், நாளை ஓட்டிக்கொண்டே போகிறானே, இப்படி நாட்கள் அதிகரிக்க அதிகரிக்க, மலையை விழுங்கினாலும் மகாதேவன் வயிற்றிலே இடம் இராது போலிருக்கிறதே, ராஜாங்கப் பணத்தைக் கொண்டு குவியும் பண்டங்களைப் போட்டு நிரப்பிவிடுகிறானே, என்று கேலியே பேசலாயினர். மன்னனின் நம்பிக்கைக்கும் மக்களின் நையாண்டிக்கும் ஒரு சில நாட்கள் போராட்டம்—மக்களே வென்றனர்.

கூப்பிடு மகாதேவனை என்று மன்னன் கூவினான்—வந்தவனைக் கண்டு கோபமாகவே பேசலானான், "கடைசிவரையிலே ஏமாற்றியே விடவா எண்ணுகிறாய் எத்தா! நான் ஏமாளி அல்ல! இனியும் உனக்கு, மாளிகை வாசமும், மருமகனுக்கு செய்வது போன்ற உபசாரமும் நடைபெறும் என்று எண்ணாதே. நாளைக் காலையில் நீ மலையை விழுங்கியாகவேண்டும்" என்றான். மக்கள் 'சபாஷ்' என்றனர்—மகாதேவன், என்ன செய்தான்? பயந்தானா? இல்லை! பதைத்தானா? கிடையாது! நான் ஏமாற்று வித்தைக்காரன், எல்லாம் இந்த ஜாண்வயிற்றுக்காகத் தான், மன்னித்துவிடுக மன்னவனே! என்று கெஞ்சினானா? இல்லை! இல்லை! மன்னா! நாளைக்கா மலையை விழுங்கச் சொல்கிறீர்?—என்று கேட்டான் கெம்பீரமாக நின்றபடி. மன்னன் மருண்டான். ஆமாம் நாளைக்கு!—என்றான் மன்னவன்.

வேண்டாம்! இன்றே விழுங்குகிறேன் மலையை! இப்போதே!-என்று கர்ஜனை செய்தான் மகாதேவன். கொலுமண்டபம் நிசப்தமாகிவிட்டது, கொக்கரிக்கலானான் மகாதேவன், "மலையை விழுங்கப்போகிறேன் இன்று, இப்போது, இங்கேயே! ஏன், மன்னரே! சும்மா இருக்கிறீர்? உத்தரவு கொடும்!" என்று. "சரி-சரி-உத்தரவு தந்துவிட்டேன்"—என்று மன்னன் குளறினான். "பேஷ்! சபாஷ்! இப்போது காட்டுகிறேன் என் சமர்த்தை! மலைவிழுங்கி மகாதேவனைச் சாமான்யமாக எண்ணிவிட்டீர்களல்லவா, இதோ பாருங்கள்" என்று கூவியபடி, வயைத் திறந்தான் திறந்தபடி மன்னனைப் பார்த்தான், பார்த்துவிட்டு, மறுபடி மன்னனை "ஏன் மன்னரே! சும்மா இருக்கிறீர்? போய், மலையைக் கொண்டுவரச் சொல்லுங்கள்—மலையைத் தூக்கிக் கொண்டு வந்து, என் வாயில் போடும்படி உத்தரவு பிறப்பியுங்கள் என்றான். மன்னன், திடுக்கிட்டுப் போனான்.!

"நான் மலையை விழுங்குவதாகத் தான் ஒப்புக்கொண்டேன்- மலையை எடுத்துவந்து என்னிடம் தந்ததும் நான் விழுங்கிவிடுவேன்"—என்றான் மகாதேவன். மன்னன், ஏதும் பேச இயலாமல், மலையை விழுங்கவேண்டாம், நீ இந்த மண்டலத்தைவிட்டுப் போனால் போதும் என்று கூறிப் புலம்பலானான்—என்று வேடிக்கைக் கதை ஒன்று உண்டு—அதுபோலாகிவிட்டது, 'நம்மசர்க்காரின்' போக்கு. மந்திரிகள், மலைவிழுங்கி மகாதேவன் போலவே பேசுகிறார்கள்; மந்திரி மாதவமேனனின் பேச்சு இதற்கோர் சரியான எடுத்துக்காட்டு.

நம்ம சர்க்கார்—இதுதானா? நண்பர்கள் நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டுகிறேன். மலையை விழுங்குவதாகச்சொல்லி மாளிகை வாசம் பெற்ற மகாதேவன்போல, மக்களின் சகல கஷ்டங்களையும் போக்குவதாகச்சொல்லி ஆட்சிப்பீடம் பெற்ற அமைச்சர்கள் இப்போது, மலையைக் கொண்டுவந்து வாயில் போடு, விழுங்குகிறேன், என்று பேசிய மகாதேவன்போலவே, பொதுமக்களின் கஷ்டத்தைப் போக்கி நன்மையை வளர்க்கக்கூடிய அளவு, எங்களுக்கு வசதி. பணம் தாருங்கள், பிறகு செய்கிறோம், என்று மந்திரிகள்பேசுகிறார்கள்!

மாதவமேனன், இந்தப்போக்கையும் மிஞ்சிவிட்டார் ஒருபடி— நாங்களும் ஏதும் செய்யத்தான் இல்லை—எங்களைக் கண்டதும் கல்லாலடிக்கலாமா என்ற அளவுக்கு உங்களுக் கோபம்கூடவரும்—ஆனால் நீங்கள் மிக மிக நல்லவர்கள், அப்படி எல்லாம் செய்ததில்லை — செய்யமாட்டீர்கள்— செய்யவேண்டாம்—என்று அழகாக அபின்னூட்டிப்பார்க்கிறார்.

'நம்மசர்க்கார்' ஏதும் செய்யவில்லை, என்பதை 'நம்ம மந்திரியும்' ஒப்புக்கொள்கிறார்—பிறகு நம்மசர்க்கார் என்ற பாசம் இருக்கக்காரணம் என்ன? இருந்து பலன் என்ன? இதைத்தான் காங்கிரஸ் நண்பர்கள் யோசித்துப்பார்க்கவேண்டும்.

நம்ம சர்க்கார், நாடாளும் உரிமையைப்பெற, எதை எதையோ சாதித்துவிடமுடியும் என்று சண்டமாருதமாகப் பேசும், நாடாள வந்தால் சொன்னதைச் சாதிக்காது, சாதிக்கவில்லை என்பதையும் சொல்லும், நாமோ, அப்போதும் 'நம்ம சர்க்கார்' என்றுதான் பாத்யதை கொண்டாடவேண்டும், இல்லை என்றால் எதிர்க்கட்சிக்காரன் எளனமாக எண்ணுவான்—என்றபோக்கு, ஜனநாயகமல்ல — நல்லாட்சிக்கு வழி கோலுவதல்ல.

நாங்கள் ஏதும் இதுவரை செய்யவில்லை, எனினும் எங்கள்மீது ஆத்திரங்கொள்ளாத உங்கள் பெருங்குணத்தைப்பாராட்டுகிறேன் என்று தந்திரமாகப்பேசித்தப்பித்துக்கொள்கிறார் மந்திரி மாதவமேனன் — ஏன் செய்யமுடியவில்லை, முயற்சித்துமுடியாமற்போய்விட்டதா அல்லது முயற்சி எடுத்துக்கொள்ளவேயில்லையா, முட்டுக்கட்டை போடப்பட்டதா, என்னதான் சூட்சமம் என்று விளக்கினாரா- இல்லை! மந்திரி மாதவமேனன் இந்த அளவோடுவிட்டார், அமைச்சர் டாக்டர் குருபாதம் இதைவிட ஒருபடி முன்னேறுகிறார்.

"சர்க்காரில் பதவி பெற்றால், ஏதாவது கிராம சேவையைச் செய்ய முடியும் என்று நம்பித்தான் பதவியை ஏற்றுக்கொண்டேன், இப்போது தெரிகிறது பதவியில் இருந்து கொண்டு ஏதும் செய்யமுடியாது என்பதை. வெளியே இருந்தாலாவது ஏதாவது செய்யலாம். பதவியில் இல்லாவிட்டாலும், உண்மையான தொண்டு செய்பவனுக்கு, வெளியேயும் மதிப்பு இருக்கத்தான் செய்யும். இதை நான் மனம வெறுத்துக்கூறுகிறேன்."

காரைக்குடியில், அமைச்சருக்கு அன்புரை கூறி வரவேற்றபோது, அவர் கூறியது இது.

அமைச்சராக இருப்பதைவிட, பதவியின்றி இருப்பது பலனுள்ள காரியம் என்று, மனம் வெறுத்துக் கூறுகிறார். ஏன்? கிராம சீர்திருத்தத்துக்கான காரியத்தை ஏன் பதவியிலிருந்தபடி செய்ய முடியவில்லை? வழி தெரியவில்லையா? தெரியும் வழியில் ஏதேனும் தடை போடப்பட்டதா? திட்டம் இல்லையா? திட்டத்துக்கு ஆதரவு இல்லையா? ஆதரவு இருந்தும் பண வசதிகிடைக்கவில்லையா? என்ன காரணத்தால், அமைச்சர்பதவி மூலம் ஏதும்செய்ய முடியவில்லை, என்று டாக்டர் குருபாதம் கூறினார். கூறியான பிறகு, ஏதும் செய்ய வழிவகையற்ற நிலையில், ஏன் இன்னமும் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கிறார்! மக்களின் சிந்தனையைக் கிளறக்கூடிய கேள்விகள் இவை.

அமைச்சர்களே இப்படிக் கூறுகிறார்கள், ஒன்றும் செய்யவில்லை— ஒன்றும் செய்யமுடியவில்லை— எதிர்பார்த்த பலன் ஏற்படவில்லை— என்றெல்லாம். எனினும், இன்னமும் அவர்கள் அமைச்சர்களாகவே உள்ளனர்! நியாயமா? இந்த இலட்சணத்துடன் உள்ள அமைச்சர்களால் நடத்தப்பட்டுவரும் சர்க்காரை, 'நம்மசர்க்கார்' என்று, பாத்யதை கொண்டாட, நேர்மையில் நாட்டமும் மக்கள் நலனில் அக்கறையும் கொண்டவர்கள் முன்வருவது அறிவுடைமையாகுமா? ஏன், 'நம்மசர்க்கார்' இப்படி, ஏதும் செய்யாத, எதையும் செய்யமுடியாத நிலையில் இருக்கிறது? நம்ம சர்க்காரில் உள்ள அமைச்சர்களின் திறமைக் குறைவு இதற்குக் காரணமா? இங்கு இதற்குள் இரு அமைச்சர் குழு அமைத்துப் பார்த்தாகிவிட்டது. திறமையற்றவர்களா, முன்பு இருந்தவர்களும், இப்போதுள்ளவர்களும? "நம்ம சர்க்கார்" ஏற்பட்டால் என்னென்ன நடைபெறும் என்று காங்கிரஸ் நண்பர்கள் இன்பக் கனவு கண்டுவந்தார்களோ, அவைகள் ஈடேற்றப்படவில்லை. அமைச்சர்களாக உள்ளவர்களுக்கு, அவைபற்றி அக்கரையில்லையா? அக்கரை இருந்தும், ஆற்றல் இல்லையா? ஆற்றல் இருக்கிறது, ஆனால் வசதி இல்லை என்று கூறப்போகிறார்களா?

நாம் கூறுகிறோம், 'நம்ம சர்க்காரிடம்' திட்டம் இல்லை, தெளிவான, தீர்மானமான திட்டம் இல்லை — அவர்களிடம் உள்ள அரை குறைத் திட்டத்துக்கும், பணம் இல்லை! பணம் புதிதாகப் பெறுவதற்கு வழிவகை தெரியவில்லை. தெரிந்தாலும், 'நம்ம சர்க்காருக்கு' தன் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான வழிவகை வகுத்துக் கொள்வதற்கான அதிகாரம் இல்லை. ஏன்? நம்ம சர்க்கார், ஒன்று அல்ல, இரண்டு!

## ஆறுதல் பெறட்டும்!

சுமார் பன்னிரெண்டு ஆண்டுகளாகத், தங்களுக்கு வாக்களித்த வாக்காளர்களைத் திரும்பிப் பார்க்க வேண்டிய அவசியமில்லாமல், ரிப்பன் கட்டிடத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த அன்பர்கள், முடிவாக வாக்காளர்களைச் சந்திக்க வேண்டிய நிலையைச் சென்ற திங்கள் 30 ம்-நாள் பெற்றனர். பழைய அங்கத்தினர்களில் சிலர் தேர்தல் போட்டியில் கலந்துகொள்ளவில்லை; பலர் கலந்துகொண்டனர். அவ்வாறு கலந்துகொண்ட அங்கத்தினர்களில் குறிப்பிடத்தகுந்த சிலர்-தங்கள் மூதாதையர்களால் தங்களுக்காகக் கட்டி வைக்கப்பட்ட தரும சத்திரமே நகரசபை என்று நம்பிக்கொண்டிருந்த சிலர்—நகர மக்களுக்கு நலம் பல செய்வதே நகரசபையின் நீங்காக் கடமை என்பதை அறியாது, இளைப்பாறி இன்பம் துய்க்கும் மணிமண்டபமெனக் கொண்டிருந்த சிலர் — தாங்கள் கட்டிய முன்பணம் தொலைந்து போகும் நிலையில் தேர்தலில் முறியடிக்கப்பட்டிருப்பது; வாக்காளரை மதியாது செயலாற்றும் எவருக்கும் சிறந்ததோர் படிப்பினையாக இருக்கிறது.

ஆந்திர காங்கிரசிற்கும் தமிழ்நாடு காங்கிரசுக்கும் இருந்த பிளவு நிலையின் காரணமாக, காங்கிரஸ் சார்பில் தேர்தலுக்குப்போட்டி இடுவது முடியாததாகப் போய்விட்டது. இருந்தாலும் தேர்தல் சிகண்டிகள் அரிய வாய்ப்பைக் கைநழுவ விட்டு விடுவார்களா? தோள் தட்டித் துடைதட்டிக் கிளம்பினர், சென்னை நகரைக் காப்பாற்றும் பெரும் பணிக்கு. 'தமிழ்நாடு எல்லைக் குழுவினர்' என்றும் தாங்களாகவே பெயரும் சூட்டிக்கொண்டனர். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் பெயரினால் தேர்தலில் தலையிடவில்லையானாலும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் எவர் எவர் சூத்திரதாரிகளாக இருக்கிறார்களோ, அதே நாட்டாண்மைக்காரர்கள் தான், இந்த எல்லைக் கமிட்டியிலும் முக்கிய வேடங்களிலே காட்சியளித்தார்கள். நிறத்தில், ஆரஞ்சுக்கும் மஞ்சளுக்கும் அதிக வித்தியாசம் இல்லை!

நகரத்திலுள்ளஎல்லாப்பிரிவுகளுக்கும், எல்லைக்கமிட்டி முன்கூட்டியே அபேட்சகர்களை நிற்கவைக்கவில்லை. ஆனால் தங்கள் தங்கள் இச்சைப்படி அபேட்சகர்களாக நின்ற பின்னர் அவ்வாறு நின்றவர்களில் சிலரை, எல்லைக்கமிட்டி சொந்தம் பாராட்டிக்கொண்டது.

எல்லைக் கமிட்டியின் ஆசீர்வாதத்தைப் பெற்றவர்களில் பெரும்பாலோர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களே யன்றி வேறில்லை. எல்லைக் கமிட்டியினரால் நற்சாட்சிப்பத்திரம் பெற்ற 55 அபேட்சகர்களில் 30 நபர்கள் தோல்வியுற்றனர். இத்தோல்வியின் மூலம், எல்லைக் கமிட்டியின் மூலவராக விளங்கிய முத்துரங்கம் அவர்களுக்குப் பொது மக்களிடம் உள்ள செல்வாக்கு நன்கு விளங்கிவிட்டது.

காங்கிரஸ் ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கு ஆளாகி அவதிப்பட்ட தொழிலாளர் தலைவர் தோழர் அந்தோனிப் பிள்ளையைத் தொழிலாளர் அதிகப்படி வாக்குகளைத் தந்து வெற்றிபெறச் செய்ததும், அவரை எதிர்த்து நின்றவரும் காங்கிரசில் செல்வாக்கு உள்ளவருமான அபேட்சகர், தம் ஜாமீன் தொகையையும் இழக்கும்படி செய்துவிட்டதும் குறிப்பிடத் தகுந்ததாகும்.

திராவிடர் கழகத்தின் முக்யஸ்தர்களில் சிலர் தேர்தலில் கலந்துகொண்டதும், அவர்களைக் குறித்த விஷமத்தனமாகப் பிரசாரம் செய்து பார்த்தும், பொய் உரைகளில் வாக்காளர்கள் மயங்கி விடாமல் திராவிடர்கழகத் தோழர்களான ஜீவரத்தினம், இராமலிங்கம், முனிசாமி முதலியவர்களைத் தேர்ந்தெடுத்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

எந்தக்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், சொந்தத்தில் எக்கொள்கையைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தாலும், அதனை எல்லாம் அவ்வளவாகப் பொருட்படுத்தாது, நகரத்தின் நலத்தையே முதன்மையாகக் கொண்டு செயலாற்றும் உறுதி உடையவர்களைத்தான் வாக்காளர்கள் விரும்புவார்கள்—விரும்புகிறார்கள் என்பதைத்தான் இத்தேர்தல் தெளிவுபடுத்தியிருக்கிறது.

இரண்டொருவர், நகரசபையைச் சொந்தச் சொத்தாக மதித்துக்கொண்டு, தங்களுக்கு நெருங்கிய உறவினரையும் நண்பர்களையும் பல இடங்களில் நிற்க வைத்துத் தேர்தலில் போட்டி இட்டனர். அவர்கள் சிறுசெயல் ஈடேறாதவாறு வாக்காளர்கள் செய்துவிட்டனர். அவர்களை அம்பலத்துக்குக் கொண்டு வர நாம் விரும்பவில்லை.

திராவிடர்கழகத் தோழர்களை நாம் வாழ்த்துக் கூறி வரவேற்பதோடு, தேர்தல் சூதாடிகள், எந்தப்போர்வையில் புகுந்து வந்தபோதிலும், தாங்கள் இனியும் ஏமாறமாட்டோம் என்பதைத் தக்க முறையில் புத்திபுகட்டிய வாக்காளர்களை நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

# ★ களத்தில் கவலை! ★

அறப்போர் தொடுத்துள்ள நமது அன்பர்களுக்கு, சின்னாட்களாகச் சிறிதளவு கவலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. செயலாற்றிக் கொண்டிருந்தவர்களுக்கு, திடீரெனக் கிடைத்த ஓய்வு, கவலையைத் தருவதிலே ஆச்சரியமில்லை. ஆனால் சிறிதளவு, பிரச்னையையும், நிலைமையையும், அலசிப் பார்த்தால், இந்தக் கவலை நீடிக்கக் காரணம் இல்லை.

அறப்போர் நடாத்தி வந்த நாம் அலுத்துப்போயோ, அடக்குமுறையினால் தகர்க்கப்பட்டோ, படைவரிசை குலைக்கப்பட்டோ, நமது அறப்போரை நிறுத்திவிடவில்லை.

இன்றும் சிலபலதோழர்கள் அறப்போர் காரணமாகச் சிறை சென்றவர்கள், சிறையிலே வாடிக்கொண்டுதான் உள்ளனர். போலீசிடம் அடிபட்ட தோழர்களின், காயத்திலிருந்த இரத்தம் உலர்ந்திருக்கும், ஆனால் வடு மறையவில்லை. வழக்கு மன்றங்களிலே, அறப்போரில் ஈடுபட்ட தோழர்களின் விசாரணை தொடர்ந்து நடந்தவண்ணம் இருக்கிறது, இந்தக்கிழமைதான், வெளிவந்தது தூத்துக்குடித் தோழர்கள் 35 பேர், தண்டனைபெற்ற செய்தி, களத்திலே, ஏன் கவலை! எதை எண்ணிக் கவலைப்பட வேண்டும்!

தலைவரின் அறிக்கையும் நிர்வாகக் கமிட்டியின் விளக்கமும், பிரச்னையைத் தெளிவாக்கி இருக்கிறது.

நாம் எற்கனவே எடுத்துக்கூறியிருக்கிறபடி, ஹைதராபாத்பிரச்னை, காரணமாக, அறப்போரை நிறுத்தி வைத்திருக்கிறோம்—சிலநாட்களுக்கு.

அறப்போரைக்கைவிட்டு விட்டோமென்று, ஆளவந்தார்களே கூறவில்லை—கூறமுடியாது— அமைச்சர்கள் நாள்தோறும் இந்தி எதிர்ப்பாளர்களைப் பற்றிப் பேசியவண்ணம் இருப்பதே சான்று, அறப்போர் கைவிடப்படவில்லை என்பதை விளக்க.

இந்தி ஆதரிப்பு வாரம் கொண்டாடுவதும், ஊர்வலம் நடத்துவதும், ஒவ்வொரு கூட்டத்திலும் இந்தி கட்டாயபாடமில்லை, என்று விளக்கம் கூறப்படுவதும், எதைக் காட்டுகிறது? இந்தியை எதிர்த்துத்தொடுக்கப்பட்ட அறப்போர், மீண்டும் தொடங்கப்பட்டே தீரும் என்பதை அமைச்சர்கள் அறிந்திருக்கிறார்கள் என்பதைத்தானே! நிலைமை இவ்விதமிருக்க, நண்பர்களுக்குக் கவலை ஏன் பிறக்கவேண்டும்.?

ஹைதராபாத் நடவடிக்கையைப் பற்றிக் கவலைப்படாமல் நாம், அறப்போரை நடத்தியிருக்கவேண்டும், என்று கருதினவர்கள் பலர் உண்டு-அவர்கள் மூன்று வகையினர்.

1. அறப்போரை அழித்துவிடவும், நாம் நாட்டுக்கு ஆபத்து நேரிட்ட நேரத்திலும் விட்டுக் கொடுக்காத விஷமிகள் என்று நம்மீது தீராத பழி சுமத்தவும் காத்துக்கொண்டிருந்த கூட்டம்.

2. அறப்போரை ஹைதராபாத்துக்காகக்கூட நிறுத்தாமல் நடத்துகிறார்கள் பாரீர் எமது வீரர்கள், என்று கித்தாப்புப் பேசி, நாங்கள் சொல்லி நிறுத்திவைக்கிறோம் போராட்டத்தை, எங்களைக் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள், என்று எதிரிகளிடம் போய்ப்பேரம் பேசவிரும்பிய மற்றோர் கூட்டம்.

3. உண்மையிலேயே, அறப்போர் நடக்கவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட நமது நண்பர்கள்.

நமது விளக்கம் இந்த மூன்றும் வகையினருக்குத்தான்—முதல் இரு பிரிவினருக்குமல்ல — அவர்கள் விரித்த வலையிலே நாம் விழ மறுத்துவிட்டோம், விவேகம் இருந்ததால் மட்டுமல்ல, அறப்போரிடமும் அதற்கு அடிப்படையான காரணத்திடமும் நமக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருப்பதால்.

அறப்போர் மீண்டும் ஆரம்பமாகப் போகிறது—விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடங்கப்படும்—விரைவில்!

ஈரோடு மாநாட்டிலேயே, அறப்போர் மீண்டும் தொடங்குவதற்கான நாள் அறிவிக்கப்பட்டுவிடும்.

ஆகவே, களத்திலே கவலையோ, பாசறையிலே அதுபற்றிய பலரகப் பேச்சோ, வேண்டாம்.

சிலபல தோழர்களிடம் தரப்பட்ட சோளக்கஞ்சிக் கலயத்தையும், நடுக்காட்டில் விடப்பட்ட தாய்மார்களையும், அடிபட்ட தொண்டர்களையும், நமதுகிளர்ச்சியின் நியாயத்தை நம்ப மறுக்கும் காங்கிரஸ்காரர்களில்சிலர் வீசிய கற்கள் தந்த அடியையும், நாம் மறந்துவிடவில்லை, நமது கவனத்திலிருந்து என்றும், மறைந்துவிடக்கூடியன அல்ல. நாம் மரக்கட்டைகளல்ல, ஆச்சாரியார்கவர்னர்ஜெனரலாகப்பவனிவந்த அதேபோது, நமது தலைவர் சிறையிலே கைதியாக இருந்ததை, மறந்துவிட.

நண்பர்களே! நமது போர் நின்றுவிடவில்லை—அறப்போர் மீண்டும் ஆரம்பமாகியே தீரும் — ஈரோடில், நாள் அறிவிக்கப்படும்.

**அண்ணாதுரை**

7-ம் பக்கத் தொடர்ச்சி

இருக்கிறான்? இவர்களைப்பற்றி அளவுகடந்து புகழ்ந்து மக்கள் மனதைக் கவரும் முறையில் பத்திரிகைகளில் எழுதினோமே! இவர்களைப் பற்றி இப்போது ஒன்றும் தெரியவில்லையே! ஏன்? என்றுகூடப் பத்திரிகை ஆசிரியர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. பாமர மக்களுக்கு ஏதாவது புதிதாகக் கவர்ச்சி அளிக்கக்கூடியதாக இருந்தால் அதுவே போதும் என்ற அளவில்தான் பத்திரிகை ஆசிரியர்கள் பலர் நடந்து கொள்கின்றனரேயன்றி, தங்களுக்குக் கிடைக்கும் செய்திகளைப் பரிசீலனை செய்து, எழுதுபவர்களுக்கு மட்டுமல்ல — படிப்பவர்களுக்கும் அறிவு இருக்கிறது என்று எண்ணி, உண்மைக்கும் அனுபவத்துக்கும் பொருந்தச் செய்திகளை வெளியிட வேண்டுமென்று கருதுவதில்லை. இந்த இரங்கத்தக்க நிலை மாறும் வரையில் பல அற்புதங்கள் இந்நாட்டில் உண்டாக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கும்.

●

6-ம் பக்கத் தொடர்ச்சி

காஸ்கரில் வீரர் சிந்தும் இரத்தமும் அந்த வீரர்களுக்காக, அந்நாட்டவர் சிந்தும் கண்ணீரும், அதனைக்கண்டு அறிவாற்றலுள்ள அனைவருக்கும் மூண்டெழும் ஆத்திரமும், பிடிவாத குணம் படைத்த இந்தஏகாதிபத்யங்களைச்சின்னபின்னமாக்கிவிடும். வரப்போவதறியாது, வம்பை விலைக்கு வாங்கும்வக்கிரபுத்தியுடன், பிரான்சு ஏகாதிபத்யம் நடந்துகொண்டு வருகிறது. இந்த ஆட்டம் நீண்டநாள் நடைபெறாது.

✲

# நாட்டு நிலையும்—நல்லோர் மதியும்?

'காணி நிலம் வேண்டும்—மாகாளி காணி நிலம் வேண்டும்' என்று கதறிக் கதறிக் கவிஞர் காலமாகிவிட்டார். அன்று நிதிபடைத்தோர் செவியில், அவருடைய துன்பக்குரல் புகவில்லை. அறிவு—ஆற்றல்—புலமை—அஞ்சாமை—அவ்வளவுந்தான் அவருக்கு இருந்தது. செல்வர்கள், அவரிருந்த திக்கின் பக்கமும் திரும்பவில்லை. பலகால உயிரோடு இருந்து, தமிழுக்குப் பணிபல புரியவேண்டிய அவர், வறுமையால் பீடிக்கப்பட்டு, காலம் வருவதற்கு முன்னரே மறைந்துவிட்டார்.

ஆனால், இன்றோ?

திருவிழா, படத்திற்குப் பாமாலை பூமாலை, நினைவுச்சின்னமாக மணிமண்டபம், ஆண்டாண்டும் அவர் பெருமை கூறிக்களிப்படையும் பக்த கோடிகளின் எழுத்தும் சொல்லும், இன்று நாடெங்கும் நிரப்பி இருக்கிறது.

அன்று பாரதியார் புதுவையில் கால் வயிறு அரை வயிறு உண்டு உயிர் வதைந்திருந்த வேளையில், இன்று துதிபாடும் அவ்வளவுபேரும் உயிரோடு இருந்திருக்க முடியாதானாலும் சிலராவது செல்வத்திலே புரண்டுகொண்டுதான் இருந்திருப்பார்கள். அந்தச் சமயத்தில் இவர்களுக்குப் பாரதியாரின் திறமை, அவர் தமிழ்ப் பற்று, அவருடைய வளைந்தவாழ்வு; ஆக எதுவும் இந்தப் பக்தர்கள் கண்களில் படவில்லை. மறைக்கப்பட்டுக் கிடந்தது.

ஆனால், அவர் இறந்த பின்னர், எங்கிருந்தோ இவர்களுக்கு அவர் பாட்டின் மீதும், அப்பாட்டைப் பாடிய புலமை மீதும் கட்டுக்கடங்காத காதல் பிறந்துவிட்டது. வாரி இறைத்தனர் பணத்தை. உரத்தகுரலில், கவிஞருக்குத் துதி பாடுகின்றனர்.

பொது மக்களிடத்தில் எளிதில் புகழ் பெறவும், பணம் கேட்போரின் தயவு தாட்சண்யத்திற்கும், சுலபமாகப் பாபத்தைத் தொலைத்துப் புண்யவான்களாக மாறிவிடலாம் எனும் நம்பிக்கைக்கும் அடிமையாகிப் பணம் தந்த பண்புடையோர் போக, மீதமுள்ளவர்களுக்கெல்லாம், இத்துறையில் ஆசையைத் தூண்டினது அவரவர்களுக்குள்ள பூஜா மனோபாவந்தான் மூல காரணமாகும்.

இன்று பணம் கொடுத்த பலர், பாரதியார் உயிரோடு இருந்த காலத்தில், அவரை ஆதரிக்க வேண்டுமெனும் மனிதாபிமானம் துளியும் இன்றி, ஆலயத் திருப்பணிக்கும்—அம்மனின் திருடுபோன தாலிக்கு ஈடு செய்யவும்—தலைக்கு வயிரத்தால் மூடி போடவும், உருக்குலைந்த வாகனங்களைப் புதுப்பிக்கவும், இல்லாத ஏற்பாடுகளை ஏற்படுத்தவும்—தங்கள் பொருட்களை வீணுக்குச் செலவிட்ட வள்ளல்கள்தான். இதற்கு, அவர்களைக் குறைகூறிப் பயன் இல்லை. பல காலத்துப் பழக்க வழக்கம், படித்துக் கற்ற — பக்கம் நின்று கேட்ட புராணக் கல்வியின் தன்மை, புரோகிதரின் போதனை, இவ்வளவும் அன்றோ அவர்கள் உள்ளங்களில் குடியேறி இருக்கின்றன. இந்நிலையில், காலந் தரும் கருத்தோ, பிறநாட்டார் போக்கோ, பகுத்தறிவின் ஒளியோ, அவர்களை எப்படிப் பற்றமுடியும்? ஒருவேளை உண்மை விளங்கினாலும், அது நீடித்து நிலைப்பது எங்ஙனம் கூடும்? பழமைப் பிடியன்றோ பலம் பொருந்தியதாக இருக்கிறது?

எனவே, பூஜாமனோபாவம் மாறி, மக்கள் உயிரோடு இருக்கும் பொழுதே, அவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களைய தம்மாலான எதுவும் செய்யவேண்டும் எனும் சீரிய எண்ணம் நம்மில் ஒவ்வொருவருக்கும் உண்டாகவேண்டும். பழமையின் பொருந்தா நிலையை விளக்கிக் காட்டி, தாங்கள் தினம் தினம் அனுபவித்துச் சுகம் பெறும் புதுமையின் சிறப்புகளை எடுத்துக்கூறி, அன்பான முறையில் பழமையைச் சாடினால்தான் மக்கள் நல்லறிவு பெறுவர்.

மற்ற நாடுகளிலே இந்த பூஜா மனோபாவம் சில நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே நசித்துப்போன காரணத்தால் தான், அங்கு இன்று நல்லறிஞர்களை, ஆற்றல் மிக்கவர்களை, திறமைசாலிகளை, அவரவர்கள் உயிரோடு இருக்கின்ற காலங்களிலேயே, அவர்களை மக்கள் ஆதரிக்கவும் போற்றவும் புகழவும் செய்கிறார்கள். இந்த நல்ல மாற்றத்தால், அறிவு படைத்தோர், மேலும் பலப்பல புதிய சாதனங்களைத் தோற்றுவிக்கவும், குடும்பக் கவலையற்று எடுத்த கருமத்தை வெற்றிகரமாக முடிக்க வேண்டுமெனும் ஊக்கமும் வளர்ந்து, நலம்பல நாட்டு மக்களுக்குச் செய்து குவிக்கிறார்கள். இத்தகு மன மாற்றம், அங்கு, அன்றே ஏற்படாமல் இருந்திருக்குமானால், பூஜா மனோபாவம் நன்கு வளர்ந்து நாடெங்கும் ஆலயங்களும், புதிய புதிய ஆண்டவன்களும், அவர்களை அண்டிப் பிழைக்கும் குருமார்களும், அவர்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டுக் கண்ணிருந்தும் கபோதிகளாகக் காலங்கழிக்கும் நடைப் பிணங்களையுந்தான் நாம் காணமுடியும். மக்களுக்குக் கல்வியளித்தல், மருத்துவசாலை பலகண்டு வகைபற்றவர்களுக்குப் பிணி போக்குதல், நிதிபடைத்தோர் நாட்டுக்குச் செய்யும் நற்பணிகளாகும்.

மேல்நாட்டினரின் இரத்தத்திலே, இந்தஅரும்பண்பு பலகாலமாக ஊறிப் போய் இருக்கிறது. நோக்கம் எதுவாக இருந்தாலும், நமதுநாட்டிலும் மேல்நாட்டினர்களால் நடத்தப்படும் கல்வி நிலையங்களும், மருத்துவ சாலைகளும் இங்கு ஏராளமாக உண்டு. இவைகளால்பலன்பெற்றோர், பக்குவமடைந்தோர் பலப்பலர். சிறப்புக்குரிய செயல்மட்டுமன்று இது; சிந்தனைக்குரியதும்கூட.

ஆனால், நம்மவர்களால் இங்கு செய்யப்படுவதென்ன? தெருவுக்குத் தெரு கோயில், ஊருக்கு ஊர் பெரியகோயில் ஒன்றிரண்டு, கர்ப்பத்தடை செய்யவேண்டிய நிலையிலுள்ள நமது மொழி அறியாத கடவுட் குடும்பங்கள், அவைகளைக் கட்டிக் காக்கும் 'அர்ச்சகர்கள்', அவர்களிடத்தில் பயபக்தியோடு கையேந்தி நிற்கும் நமது நல்லவர்கள், இவ்வளவுமன்றோ இங்கு இருக்கக்காண்கிறோம்.

ஏன் இந்த நிலை இருக்கிறது? இதுதான் பக்திமார்க்கத்தின் மாண்போ? இதனைமாற்ற வேண்டுமா? வேண்டாமா? நாட்டுக்குச் சேவை செய்யும் பொறுப்பும் கடமையும் உரிமை

பும் தங்களுக்குத்தான் உண்டுஎன்று பேசிக்கொள்ளும் பெரியவர்கள், இந்த நிலையைச் செப்பனிடமுன்வர வேண்டாமா?

'காணிநிலம்' மட்டுமல்ல, இன்று மக்கள் கேட்பது. குழந்தை குட்டிகளோடு குடியிருக்க, எட்டடிகுச்சுக்கும் நிலம் வேண்டுகிறார்கள். காடு திருத்தி, கல்லைநட்டுக்கோயில்கட்டிக் குபபிட்டு கூத்தாடுகிறார்களே, அந்தக்காருண்யவான்கள், கடவுள் பக்தர்கள், அவலைதைக் குரல் கிளம்பும் பக்கம் கொஞ்சம் கண்களைத் திருப்பட்டும். இந்தக் கோரக்காட்சியைக் கண்ணாலாவது காணட்டும்! கல்லைக் கடவுளாகக் கண்டு கண்டு. இவர்கள் நெஞ்சமும் பாறையாகிவிட்டதா என்று பார்க்கலாம்!

அதோ, கலசப்பாக்கம் கிராமத்தில் உயிரோடிருக்கும் தாழ்த்தப்பட்ட தோழர்கள் அலறுகிறார்கள்; குடியிருக்க இடம் வேண்டுமாம். வாங்கப்படும் நிலத்தின் கிரயத்தில் பாதித் தொகையைத் தாழ்த்தப்பட்டோரும் பாதித் தொகையைச் சர்க்காரும் தரவேண்டுமென்னும் ஏற்பாடு இருக்கிறதாம். அதன்படி தங்களால் பணம் கொடுக்க முடியவில்லை என்றும், வாங்கப்படும் இடத்திற்கும் பத்திரச் செலவிற்காகும் தொகையைக் கொடுப்பதும் கஷ்டமாக இருக்கிறதென்றும், அரசியலாரே இச்செலவை மேற்கொள்ள வேண்டுமென்றும்போளூர் ஹரிஜன சேவா சங்கத்தினரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஒருகாணி நிலமும், கிணறு வெட்டப் பணமும் வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இது மக்களில் ஒரு சாரரின் வேதனை விளம்பரம்!

சமயபுரம் மாரியம்மனுக்கு, தேவஸ்தானத்தாரால் ரூ 25,000 செலவில் தங்க சிம்மாசனம் செய்து வெள்ளோட்டம் விடப்பட்டு சிம்மாசனத்தில் மாரியம்மனை எழுந்தருளச் செய்து விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

இது மக்களை மதியாது, கல்லைக் கண்டு கசிந்துருகும் கருணையாளர்களின் கபோதிப் போக்கு!

குந்தக் குடிசை இல்லை; கூக்குரல் கிளம்புகிறது; உடம்பில் அதற்கான தென்பும் இருக்கிறது. இருந்தாலும் ஒருகாணி நிலம் இல்லை. பயிர் செய்வதற்கு இன்றியமையாத கிணறு தோண்டப் பணம் இல்லை. காட்டு மேட்டைத் திருத்தம் செய்து, செந்நெல் விளையும் செழிப்பான நிலங்களாக மாற்றும் ஆற்றல் படைத்தவர்கள் 'அதற்கான சாதனங்கள் ஒன்றுமில்லையே, ஊராள்வோரே கவனியுங்கள்' என்று கூட்டம் கூடித் தீர்மானிக்கிறார்கள்.

இந்த அழுகுரல் கலசப்பாக்கத்திலிருந்து மட்டும் கேட்கவில்லை; நாடெங்கும் இந்தக் கலசப்பாக்கங்கள் உண்டு.

ஏற்கெனவே மாகாளிக்கு அவர்கள் மனுப் போட்டுத்தான் இருப்பார்கள் பயபக்தியோடு. மனுவுக்குத் தகுந்த பதில் கிடைக்குமென்றும் அவர்கள் பலகாலமாகவே எதிர்பார்த்துத்தான் இருந்தார்கள். முடிவில் கண்ட ஏமாற்றத்தினால், மனுப்போடவேண்டிய இடத்தைத் தெளிவாகத் தெரிந்துகொண்டு, மந்திரிமார்களுக்கு மகஜர் அனுப்பி உள்ளார்கள். நாட்டுமக்களுக்கு உடனடியாகச் செய்து தீரவேண்டிய நல்ல பலகாரியங்களிலே, நாடாள வந்தவர்கள் மாரியம்மன் போல்தான் கல்நெஞ்சம் கொண்டவர்களாக இருந்துவந்திருக்கிறார்கள்—வருகிறார்கள். எனவே இந்தப் பிரார்த்தனை மனுவிற்கு மட்டும் புதியநிலை பிறந்துவிடும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

அபிஷேக ஆராதனை, ஆடை அணி அலங்காரம், மாலைமரியாதை, மேள தாளம், போற்றித் திருஅகவல் இவ்வளவும் பெற்றுக்கொண்ட பின்னரும், மாரியம்மன் கல்லாகவே முன்பிருந்த நிலைபோல் என்றும், இருக்கக்கண்டு, மயக்கம் தெளிந்து, பரம்பரை பரம்பரையாக ஒட்டிக்கொண்டு வந்த பூஜா மனோபாவம் கொஞ்சம் குறைந்து, மாரியம்மனுக்கு மனுப் போடுவதற்கு பதில், வேறு இடத்திற்கு விண்ணப்பம் விடுக்கும் அளவிற்கு மனமாற்றம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வந்திருப்பது வரவேற்கத் தகுந்ததேயாகும். இதுவும் போதாது. ஊராளும் உரிமை தங்களுக்கே என்றென்றும் சொந்தமானது என்று எண்ணுவதும், சிலர் மந்திரிகளாக வந்துவிட்ட காரணத்தாலேயே தங்கள் மனம் போன போக்கில் செயலாற்றலாம் எனும் செருக்குக் கொள்ளுதலும் கூடாது; ஆளும் போக்கிலே தவறு இருக்குமானால் ஆளுவோரை அப்புறப்படுத்தும் உரிமை என்றென்றும் மக்களுக்கு உண்டு; இதுவே மக்களாட்சியின் பண்பு; இவைகளிலே தெளிவும், தெளிந்த வண்ணம் செயலாற்றும் துணிவும் ஏழை மக்களுக்கு ஏற்படுகிறவரையில், பண மூட்டைகளின் பாதுகாப்பாளர்களாகத்தான், மக்களாட்சி பெயர் கூறி மண்டலாதிபதிகளாக மாறுவோரின் போக்கு இருக்கும்.

ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்போரின் அந்தஸ்தைக்கவனிக்காமல், அவர்கள் மேற்கொள்ளும் செயல்களினால உண்டாகும் விளைவுகளை மட்டும் சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்பளிக்கும் பண்பாடு மக்களிடம் வேரூன்ற வேண்டுமானால், பூஜா மனோபாவம் அருகிப் பகுத்தறிவு பெருகவேண்டும். என்றாவது இந்த நிலை மக்களுக்கு வந்துதான் தீரும். இதைத்தான் வரலாறு வற்புறுத்துகிறது.

மாரியம்மனுக்கு மனுப் போட்டு போட்டு, குறைநீங்காமல் மேலும் மேலும் வேதனை பெருகி வருவதைக் கண்ட பின்னரல்லவா, தாணியாளுவோரைத் தட்டிக் கேட்க வேண்டும் எனும் நினைப்பு நெஞ்சில் முளைத்தது தாழ்த்தப்பட்டவர்களுக்கு. அவர்கள் தேவை பூர்த்தி செய்யப்படாமல், ஆளவந்தார்களிடத்திலும் அவர்களுக்கு ஏமாற்றமே கிடைக்குமானால், அதுவும் ஏழைகள்முகங்கோணாமல் பக்தி சிரத்தையோடு உபசாரஞ் செய்து, வாழ்த்தி வரவேற்றுஅன்புரை வழங்கிய நிலையிலும் அவர்களுடைய சிறு குறை களையப்படுவதற்கு பதில், ஆளும் அதிகாரிகளால் அலட்சியப்படுத்தப்படுமானால், ஏக்கமும் எரிச்சலும் ஏழைகள் உள்ளத்தில் இடம் பெறத்தானே செய்யும். தங்கள் குறைகளைப் போக்கிக்கொள்ள மனுப்போடும் மார்க்கத்தை மறந்து புதியதோர் பாதை காணவும், மற்ற நாட்டிலே தொல்லைப்பட்ட மக்கள் மேற்கொண்ட விடுதலை வழியைத் தாங்களும் கையாளவும், அதற்குத் தகுதியுடையாரைத் தேடிப்பிடிக்கவும், அத்தகு நிலையினருக்கு நாடாளும் உரிமை நல்கவும் அன்றோ நாட்டம் பிறக்கும்?

நடமாடும் தெய்வங்களுக்கு நாட்டில் குந்தக் குடிசை இல்லை; நல்வாழ்க்கை பெற வழி இல்லை; இந்த இழிந்த நிலையில் மக்களின் ஒருசார

ரின், மதி, மாரியம்மனுக்குத் தங்கத்தால் பீடம் தயாரிக்கும் அளவிற்குச் சென்றிருக்கிறது. மாரியம்மனை மண் தரையில் மரக்கட்டையில் உட்கார்ந்தால்—உட்கார வைத்தால் போதாவோ? மாரியம்மன் என்றாவது வாய்திறந்து, தம்மிடம் வரும் பக்த கோடிகளைப் பார்த்து, பொன்னால் ஆக்கிய பீடம் அமைத்துத் தர வேண்டுமென்று ஆணை இட்டதுண்டா? இவ்வினாவை, நாத்திகத்தின் முனைப்பு என்று முனிந்து முணு முணுப்பரேயன்றி, விளக்கங்கூறும் விவேகம் பெறாரே! ஆனால் இன்றில்லையாயினும் சிறிது காலம் சென்ற பின்பாவது இவர்கள் விவேகம் பெறுவர் என்பது உறுதி. இதற்குக் கலசப்பாக்கம் ஒரு எடுத்துக் காட்டு.

* * *

சென்ற திங்கள் இறுதியில் சென்னை சட்டசபையில், தொழுநோய் பிடித்தோர் நிலைபற்றிப் பேசப் பட்டிருக்கிறது. சென்னை மாகாணத்தில் மட்டும் ஒரு லட்சத்திற்குக் குறையாதோர் தொழு நோயால் பிடிக்கப்பட்டிருக்கிறார்களாம். அவர்களில் 2000 பெருவியாதிக்காரர்களை மட்டுந்தான் தனிமையாக வைத்துச் சிகிச்சைசெய்துவரப் படுகிறதாம். அதுவும் இதுவரையில் இந்நற்பணியைச் செய்துவந்த ஸ்தாபனம் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய தொழு நோய் சிகிச்சை ஸ்தாபனமாம். இதற்கு மாகாண சர்க்கார் மான்யமாக ரூ. 21000 இதுவரைகொடுத்து வந்ததாகவும், இப்பொழுது ரூ. 15700 ஆகக் குறைந்து விட்டதாகவும் மந்திரியார் குறிப்பிட்டிருக்கிறார்.

எவ்வளவு கொடுமையான நோய்? தொழுநோய் கண்டவர்களைக் காணவுமன்றோ கண் கூசுகிறது? எக்காலமும் எரி உள்ளத்தோடு இருக்கிறவர்களுமல்லவா, நோய்வாய்ப்பட்டவரைக் கண்டதும், தங்களையும் அறியாமல் கண்களைக் கசக்கும் நிலை பெறுகிறார்கள்! இந்த நோய் பெரும்பாலும் இராக்காலங்களில் தான் பிறரைத் தொத்துகிறது என்று மருத்துவ வல்லுநர்கள் ஆராய்ந்து முடிவு கட்டியுள்ளனர். மதுராந்தகம் தாலுக்காவிலுள்ள பொலப்பாக்கம் கிராமத்தில், குட்ட நோயுடையதாய்மார்களை இரவில்குழந்தைகளைவிட்டுப் பிரித்துப் பலஆண்டுபரீட்சைநடத்தி மேற்குறித்துள்ள முடிவினைக்கண்டார்ஒருவெள்ளைநிறஆங்கிலேயமருத்துவர். அக்கிராமத்திலுள்ள தொழு நோய்த் தடுப்பு மருத்துவ சாலைக்காகச்சர்க்கார் கொடுக்கும் மான்யம் ரூ. 7629 ஆகும்.

இந்நோயைப் போக்க எடுத்துக் கொள்ளும் முயற்சியிலும், மேலும் நோய் பலருக்குப் பரவாமல் தடுக்க எடுத்துக் கொள்ளும் முயற்சியே அதிமுக்யமானது. ஆனால், நோய் கொண்ட ஒரு லட்சம் மக்களில 2000 நபர்களை வைத்துப் பராமரிக்கத்தான் வழி செய்திருக்கிறார்கள். இந்நிலை நீடிக்குமானால் சில ஆண்டுகளில் இன்னும் பல லட்சம் பேர் இக்கொடு நோய்க்குப் பலியாக வேண்டியிருக்கும். இன்னும் அதிகமாக இந்நோய் தடுக்கும் பராமரிப்புச் சாலைகளை அமைக்கச் சர்க்கார் முனையப்போவதில்லையாம். எதற்கும் பாடுவதுபோல், பணமில்லை எனும் பல்லவியைத்தான் இதற்கும் சர்க்கார் பாடுகிறது!

ஆட்சியாளர்களுக்குத்தான் வேறு வேலை இருக்கிறதென்றால், மருந்துக்கள் மடாதிபதிகளாவது இப்பெரும் பணியில் கவனத்தைச் செலுத்தக் கூடாதா? சிவபக்தர்கள்—முருகதாசர்கள்—திருமால் அடியார்கள் — இத்தொழுநோயர்கள் கூட்டத்தில் இருக்கவில்லையா? தங்கள் தங்கள் மத பக்தர்களுக்கு வந்துற்ற தீராவியாதியை நீக்கவும், மற்றவர்களுக்கு அது பரவாமல் தடுக்கவும், நடவடிக்கை எடுத்துக் கொள்வது இவர்களுடைய நீங்காக்கடமையன்றோ? தாங்கள் எது எதற்கோ விரையமாக்கும்பணத்தில் ஒருபகுதியை, இத்துறையில் செலவழிக்கமுனைந்தால், சிவனார் நெற்றிக்கண்ணைத் திறந்துவிடுவாரோ—திருமாலின் பதினோராவது அவதாரம் தோன்றிவிடுமோ—தணிகை முருகன் தணியாக்கோபம் கொள்வாரோ? ஏன் இவர்களுக்கு இந்த நற்செயலிலே நாட்டம் பிறக்கவில்லை?

இவர்களையும் விட்டுவிடுவோம்! நிதிபடைத்த நல்லவர்களை, உற்சவமூர்த்தி ஊர்சுற்றி வருவதற்கு வெள்ளியினால் இரதம் அமைக்க அரும்பாடுபடும் விவேகிகளை, மாரியம்மனுக்குப் பொன்னால் பீடம் செய்த பெரியவர்களை, பார்த்துக் கேட்கிறோம், பிணிகொண்ட மக்களுக்கு நோய் நீக்கவழி செய்வது சிவனுருக்குத் திருப்தி அளிக்காத சிறு செயல் என்பது இவர்கள் முடிபா என்ற?

இதுவரையில் இங்கு, நமது மக்களுக்குவந்த நோய்போக்க எடுத்துக் கொண்ட முயற்சி முழுதும், இங்கு நம்மைச் சரண்டவந்த நாட்டினரில் நிதிபடைத்த நல்லவர்கள் கொடுத்த நன்கொடையால்தான் என்பதை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். அவர்கள் அனைவரும் நாத்தழும் பேறப்பேசும் நாத்திகர்கள் அல்ல. ஆண்டவனிடத்தில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர்கள். ஆனால், நம் நாட்டினரைப்போல் அல்லாமல், ஆண்டவனைத் தம்போன்ற மக்களிடத்தில் கண்டுகளிக்கும் போதனை பெற்றவர்கள்—கல்லையும் கட்டையையும் கடவுளாகக் கண்ட தங்கள் முன்னோர்கள் போனவழிபோகாது, மக்களிடத்திலே தெய்வத்தைக் காணும் புதுவழியிலே அறிவைச் செலுத்தும் ஆற்றல் பெற்றிருப்பவர்கள். அந்த நல்லநிலை இங்கு ஏற்பட்டால்தான், மக்களிடத்தில் தெய்வத்தைக் காண்பதே சிறந்ததெனும் போதனை இங்கு இடைபறாமல் நடைபெற்றால்தான், கல்லைமறந்து, பசியாதவர்களுக்குப் புசி புசி எனப் பிரிவு காட்டிப்படையில்போடும் பண்பும் தொலைந்து, நாட்டு நிலையைத் தெரிந்துகொள்ளவும், நலம்பல செய்யும் நல்லாட்சி முறையை ஏற்படுத்திக்கொள்ளவுமான நிலை பிறக்கும்.

பசி, பஞ்சம், பயிரிடுவோருக்கு நிலமில்லை; பலருக்குக்குந்தக் குடிசை இல்லை; தீராப்பிணியைத் தீர்த்து வைக்க வழி இல்லை; இது நாட்டின் இன்றைய நிலை. மக்களாட்சி பெயர் கூறி மன்றமேறி உள்ள, ஆளவந்தவர்கள், எதற்கெடுத்தாலும் பணமில்லை என்னும் பாசுரம் பாடுகின்றனர்! வீணுக்கு அதிகாரபீடத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கிறோமே என்னும் வெட்கங்கூட இன்னும் அவர்களுக்குத்தோன்றவில்லை!

நாட்டின்நிலை இவ்வாறு இருக்கும் நமது நிதிபடைத்தவர்கள் கண்களில் மாரியம்மனும் மன்னார் சாமியும் தெரிகிற அளவிற்கு, மக்கள் அவதி தெரியவில்லை. அவர்களை நொந்தும் பயனில்லை. அவர்கள் பெற்ற கல்வி, அவர்களை அவ்வழிக்கு இட்டுச் செல்கிறது. அறிவியல் பிரசாரமே இதற்கானமாற்று மருந்து. இப்பெரும் பணியைத்தான் இதுவரை சுயமரியாதை இயக்கம் செய்தது—செய்கிறது. (4-ம் பக்கத்தில்)

# தர்பார் இராகம்!

—❀—

“பார்த்தீர்களா, பவநகர் மகாராஜாவை! சாதாரணப் பிரஜையாக்கிவிட்டேன்—போ, சென்னைக்குக் கவர்னராக! மக்களுக்குச் சேவை செய் என்று கூறி அனுப்பிவிட்டேன். பார்த்தீர்களா, என்சமர்த்தை”— என்று சர்தார் படேல் கூறுகிறார்—பூரிப்புடன்.

“பார்த்தீரா, என்னமோ பயந்தீரே, சுயராஜ்யசர்க்கார் வந்துவிட்டால், ராஜாக்களுக்குச் சனிதிசை பிறக்கும், சுக்கிரன் போய்விடுவான் என்றெல்லாம் கூறினீரே, என்ன நடந்திருக்கிறது பாரும்! என்னை முன்பின் தெரியாது, அந்தநாட்டுக்காரர் என்றும் கூறுவதற்கில்லை, இருந்தும், இப்போது, நாமே சென்னைக்குக் கவர்னர்! கிடைத்ததா இல்லையா! கீர்த்தி போய்விடும் என்று அழுதீரே ஐயா! போகுமா? போயிற்றா! பவநகர்மட்டுமே முன்பு நம்மை அறியும்! இப்போது? பாரும் கீர்த்தி வளருவதை! மகாராஜா மட்டுமா நான், கவர்னரும் ஆகிவிட்டேன். H. H. பட்டம் மட்டுமல்ல, H. E. பட்டமும் இப்போது. பட்டமும் பதவியும், பவனியும் பாராட்டுதலும், குறையும் என்று குளறினீர்—இப்போது ஒத்தைக்கு இரட்டையாயிற்று, தெரிந்து கொள்ளும்; சமயம் தெரிந்து நடந்தால் புலியிடம் கூடப் பால்கறக்கலாமய்யா! சர்தார் படேலின் மூலம், என்னென்னமோ தொல்லைகள் வரும் சமஸ்தானாதிபதிகளுக்கு என்று சொன்னீர்! தொல்லையா வந்தது!! பாரும், நம்மை—நாம் மகாராஜா மட்டுமல்ல— ஒரு மாகாணக்கவர்னர்!!”—என்று பூரிப்புடன் பவநகர் மகாராஜா எண்ணமிருக்கமுடியுமா— நிலக்கண்ணாடி முன் நிற்கும்போது.

இரண்டிலே, எது சரி என்று பொதுமக்கள் ஏங்குகிறார்கள்.

* * *

பவநகர் ராஜாவைக் கவர்னராக்கியது, ஏதேச்சாதிகார அந்தஸ்தில் இருந்தவரை, ஜனநாயக சேவைக்குத்திருப்பிவிட்டிருக்கும் சிலாக்கியமானகாரியம், என்று சர்தார் எண்ணுகிறார். ஆனால் பவநகர் சென்னைக் கவர்னராக இருக்கிறார் என்றால், மகாராஜா என்ற பதவியையோ, அந்தப்பதவியினால் உண்டாகும் பலன்களையோ, தியாகம் செய்துவிட்டு அல்ல, அது அப்படியேஇருக்கிறது. புதிதாகவும் ஒரு அந்தஸ்து, பதவி, கிடைத்திருக்கிறது — இது சமஸ்தானாதிபதிகளுக்கு மேலும் அந்தஸ்தும், வாய்ப்பும் அதிகரிக்கிறது என்பதைக் காட்டுவதேயொழிய அவர்களின் ஜனநாயக சேவை என்று, எதைக்கொண்டுகூறுவது?

“பவநகர்மகாராஜாவே! பரம்பரை பரம்பரையாக நீர் அனுபவித்துவரும், மகாராஜாப் பட்டத்தையும் பதவியையும் ஏன் சுமந்துகொண்டிருக்கவேண்டும், இந்த ஜனநாயக காலத்தில், மக்களுக்குச் சேவை செய்து மாண்பு பெறவேண்டாமா? அதற்கொருவழி செய்கிறேன், கேளும்—இந்தப் பவநகர் சமஸ்தானாதிபதிஎன்ற பதவியும் பட்டமும் வேண்டாம்—துறந்துவிடும்” என்று பட்டேல் சர்தார், கூறி, “ஆமாம் படேல்ஜீ! அதுதான் சரி” என்று பவநகர் கூறிவிட்டு, துறவுகொண்ட பிறகா, கவர்னராக்கப்பட்டார்!—இல்லையே! அப்படி இருக்க, நான், பவநகர் மகாராஜாவை ஜனநாயக சேவை செய்யச்சொல்லிவிட்டேன், என்று பேசுவதிலே, பொருள் உண்டா, என்று அறிய விரும்புகின்றனர் மக்கள்.

ஒரு மகாராஜா, தமதுராஜ்யாதிகாரத்தையும் இழக்காமல், ராஜ கோலத்தையும் இழக்காமல், ஒரு மாகாணத்தின் கவர்னராகக் கொலுவிற்றுக்கொண்டு, இருப்பது ஜனநாயகசேவை என்று கூறுகிறாரே சர்தார். முன்பு, இந்த மாகாணத்தில் ஜனங்களிடம் ‘ஓட்டு’ வாங்கிக்கொண்டு, சட்டசபைக்குள் நுழைந்து, ஒரு பானகல் ராஜாவும் பொப்லி ராஜாவும் மந்திரியாக இருந்தபோது, சர்தாரின் சகாக்கள் என்ன சொன்னார்கள் தெரியுமோ! ஜனநாயக காலத்திலே, ஜரிகைக்குல்லாய்க்காரர்களுக்கு, பட்டமா, பதவியா! இது அடுக்குமா? என்று ஆயிரமாயிரம் மேடைகளில் முழக்கமிட்டனர்.

இப்போது, வாயை மூடிக்கொண்டுள்ளனர், எங்கோ பவநகரில்உள்ள ஒரு மகாராஜா, இங்கு கவர்னரானதை — ஓட்டுப்பெறாமல்—சர்தாரின் ஆசிபெற்றுக் கவர்னரானதைக் கண்டும்!

அன்று ராஜாக்களுக்கு ஜனநாயகத்திலே இடம் ஏது—என்று சொன்னோமே, இன்று இப்படி நடக்கிறதே, என்று வாய்திறக்கவில்லை.

மன்னிக்கவேண்டும் — வாயை மூடிக்கொண்டுள்ளனர், என்று தவறாகக்கூறிவிட்டேன்—சும்மா இல்லை, ஜனநாயகக் காப்பாளர்கள், சுருதி இலயம் கெடாதபடி தர்பார் இராகத்தைப்பாடி,

அரசே! வருக!!
அண்ணலே! வருக!!
வருக! வருக! வள்ளால்வருக!
பெருகிடும் அன்பினோய்
உருகினோம், வருக!

என்று வரவேற்பும் பாடுகிறார்கள்! இவர்கள், ஜனநாயகக் காப்பாளர்கள்!! அகராதி தலைகீழாக்கப்படுகிறது.

✱

## நைஜாமில் சென்னை ஆபீசர்கள்

ரஜாக்கர் அட்டூழியங்களி விருந்து விடுவிக்கப்பெற்ற ஐதாபாத்தை நிர்வகிப்பதற்கு நமது சென்னை மாகாணத்திலிருந்து 2500 ஆபீசர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களை 8 பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அமைதி காப்பதே இவர்களுக்கிருக்கும் முக்கிய பணி. சென்னை மாகாணத்திலுள்ள பெல்லாரி, கர்நூல், குண்டூர், கிருஷ்ண கிழக்கு—மேற்கு கோதாவரி ஜில்லாக்களை ஒட்டியுள்ள நைஜாமைச் சேர்ந்த டெலன்கானா மாகாணத்திலுள்ள எட்டு ஜில்லாக்களில் மேற்பார்வை பார்க்க நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நைஜாமின் போலீஸ் இலாக்கா முழுதிற்கும் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகத்தோழர் A. V. பாத்ரோ அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at “Dravidanadu” Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.